Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 பங்குனி 17 புதன்கிழமை (30.03.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :124

### வியன்னாவில் தமிழ்ச்செல்வன் - சொல்ஹெய்ம் சந்திப்பு

# பொதுக்கட்டமைப்புக்குப் புலிகள் புதிய யோசனைகள் சமர்ப்பிப்பு!

## ஆனால் அரசுத் தரப்பு அவற்றை ஏற்கும் சாத்தியம் இல்லையாம்

கொழும்பு,மார்ச் 30

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாணும் முயற்சியில் அனுசரணைப் பணிவகிக்கும் நோர்வேத் தரப்பின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், நேற்றுமுன்தினம் ஒஸ்ட்ரியாத் தலைநகர் வியன்னாவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார்.

அப்போது ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளைக் கையாள்வதற்கான பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்காகப் புதிய யோசனைகள் சிலவற்றைப் புலிகளின் தரப்பு எரிக் சொல்ஹெய்மிடம் கையளித்தது.

ஆனால், அந்த யோசனைத் திட்டத்தை அரசுத்தரப்பு ஏற்றுக்கொண்டு இணங்குவதற்குப் பெரும்பாலும் சாத்தியங்கள் இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பாக இலங்கை அரசுத்தரப்பு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பு ஆகிய இரண்டு பக்கங்களிலிருந்தும் முன்மொழியப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பொதுயோசனைத் திட்டம் ஒன்றை நோர்வே பிரேரித்திருந்தது.

அதனைப் புலிகள் அப்படியே ஏற்றுக் கொள்ள, அதில் சில திருத்தங்களைச் செய்ய வேண்டும் என இலங்கை அரசுத் தரப்பு வற்புறுத்தியது.

இலங்கை அரசுத் தரப்பு வலியுறுத்திய சில

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நெரிசலில் சிக்கி இருவர் பலி

மட்டக்களப்பு,மார்ச்30

மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் மக்கள் இடம்பெயர்ந்த சமயம் ஏற்பட்ட நெரிசலில் இருவர் உயிரிழந்தனர்.

பெரிய நீலாவணையில் ஏற்பட்ட சன நெரிசலில் அகப்பட்டு தங்கம் (வயது-69) என்ற மாது உயிரிழந்தார்.

சம்மாந்துறையில் இருந்து சாய்ந்தமருது நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவர் ஓட்டோவுடன் மோதி உயிரிழந்தார். பீதி காரணமாக வாகனங்கள் கட்டு மீறிச் சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது. (க-3)

## 52 ஆயிரம் லீற்றர் பெற்றோல் குடாநாட்டுக்கு

அரியாலை,மார்ச்30

அநுராதபுரத்திலிருந்து 52ஆயிரம் லீற்றர் பெற்றோல் நேற்றுப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் குடாநாட்டுக்கு எடுத்துவரப்பட்டுள்ளதாகக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தனியார் 'பௌஸர்' மூலம் எடுத்துவரப்பட்ட பெற்றோல், எரிபொருள் விநியோக நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-17)

## போராளிகள், பொதுமக்கள் மீதான தாக்குதல்களுக்குக் கடும் கண்டனம்

### பொது அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்30

கிழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மீது நடத்தப்படும் கொடூரமான தாக்குதல்கள் குறித்துத் தங்கள் எதிர்ப்பையும், கண்டனத்தையும் தீவிரமாக வெளிப்படுத்தப் பொதுமக்கள் தயாராகிவருகின்றனர்.

- இவ்வாறு யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் ஓர் அறிக்கையில் தெரிவித்திருக்கின்றது

போராளிகள் மற்றும் பொதுமக்கள் மீது கிழக்கில் நடத்தப்பட்டுவரும் படுகொலைகளைக் கண்டித்து பொது அமைப்புகளின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்குப் பிராந்தியங்களைக் கொண்ட தமிழர் தாயகத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினாலும், தேசவிரோதக் கும்பல்களினாலும் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளினதும், பொதுமக்களினதும் படுகொலைகளையும், காட்டுமிராண்டித் தனமான அச்சுறுத்தல்களையும் நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. தலைவர் இந்தியா பயணம்


ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, பிரதியமைச்சர் விமல் ரட்ணாயக்க ஆகியோர் நேற்றுமுன்தினம் இரவு இந்தியா சென்றுள்ளனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாடொன்றில் கலந்துகொள்வதற்காகவே இவர்கள் இந்தியா சென்றனர் என ஜே.வி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. இந்திய அரசியல் கட்சிகளின் பிரமுகர்களையும் ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் சந்திக்கவுள்ளனர். (க-3)

## போராளிகள் மீதான தாக்குதலைக் கண்டித்துத் திருக்கோவிலில் ஹர்த்தால்

புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் உட்பட மூன்று போராளிகளை விசேட அதிரடிப்படையினர் தாக்கியதைக் கண்டித்துத் திருக்கோவில் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், தம்பட்டை போன்ற இடங்களில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அரசுக்கும் அதன் படையினருக்கும் எதிரான

(16ஆம் பக்கம் பார்க்க)





திருக்கோவில் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் அதிரடிப் படையினரின் தாக்குதலுக்கு இலக்கான அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் கல்முனை வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவதையும், அவர் தாக்கப்பட்டதைக் கண்டித்து திருக்கோவிலில் நேற்று நடந்த ஹர்த்தாலின் போது ரயர்கள் எரிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

*படங்கள்: எ.எல்.எம்.சலீம் - அம்பாறை செய்தியாளர்.*

## சாவகச்சேரி நகரத்தை நவீன மயமாக்க இணக்கம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

சாவகச்சேரி நகரை நவீனமயமாக நிர்மாணிப்பதற்காக புதிய நகரத்திட்டம் ஒன்று நகர அபிவிருத்தி அதிகார சபையால் வகுக்கப்பட இருக்கின்றது.

புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சுச் செயலாளர் எம்.ஆர்.ஜயசிங்க, நகர அபிவிருத்தி, நீர் விநியோக அதிகார சபைத் தலைவர் ரி.ஹேவகே ஆகியோர் நேற்று சாவகச்சேரி

(16ஆம் பக்கம் பார்க்க)

## ரஷ்யாவின் கூட்டுப்படைத் தளபதி குடாநாட்டுக்கு இருநாள் விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

குடாநாட்டுக்கு இருநாள் விஜயம் மேற்கொண்டு ரஷ்யாவின் இராணுவ, கடற்படை கூட்டுத்தளபதி கேணல் அன்றனி வீ.சதோரோக்கினி நேற்று யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

நேற்றுக்காலை பலாலியில் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனைச் சந்தித்து, யாழ். மாவட்ட நிலைமைகள் குறித்துக்கேட்டறிந்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மருத்துவபீடத்திலிருந்து குணானந்தனை விடுவிப்பதாக உறுதிமொழி வேண்டும்!

## மாணவரின் போதனையை ஆரம்பிக்க நிபுணர்கள் நிபந்தனை

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதி ஆண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சைக் கற்கை நெறி தொடர்பான பிரச்சினைக்கு ஒரு மாற்று வழியாக டாக்டர் குணானந்தனைத் தற்காலிகமாக யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து விடுவிப்பதை நிறுத்தி அவரைப் பேராசிரியர் சார் பிரிவைக் கையேற்குமாறு கேட்டுக்கொள்ளலாம்.

அது சாத்தியமில்லை எனில், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு வழங்கும் மாற்றுப்பதவியை ஏற்பார் என்று உறுதி அளிக்கும் கடிதத்தை அவரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதிக்கும் மருத்துவ நிபுணர் குழுவுக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.

மருத்துவபீட மாணவர் விவகாரம் தொடர்பாகப் பீடாதிபதி டாக்டர் கே.சிவபாலன் நேற்று முன்தினம் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களைச் சந்தித்து இந்தக் கலந்துரையாடலை நடத்தியிருந்தார்.

இந்தக் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகள் பல்கலைக்கழகத் துணை வேந்தரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்களின் முக்கிய சாராம்சம் வருமாறு:-

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்திய நிபுணர்களின் சேவையைப் பல்கலைக் கழகம் வருகை விரிவுரையாளர் சேவையாகப் பெறவேண்டுமாயின் -

★ யாழ். மருத்துவபீடத்தில் இருந்து டாக்டர் குணானந்தனை நிரந்தரமாக விடுவிக்க வேண்டும். இல்லையேல், குறிப்பிட்ட காலவரையறைக்குள் செய்யப்படும் என்று மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் எழுத்து மூலம் வைத்திய நிபுணர்களுக்கோ அல்லது துணைவேந்தருக்கோ அறிவிக்கவேண்டும்.

குறிப்பிட்ட காலவரையறைக்குள் அவ்வாறு செய்யப்படாவிட்டால் மீண்டும் சத்திரசிகிச்சைக் கல்வி தடைப்படும்.

டாக்டர் குணானந்தன் வைத்தியக் கல்விப் போதனையையும், பேராசிரியர் சார் பொதுச் சத்திர சிகிச்சை அலகின் பொறுப்பையும் செய்ய முடியாது - என்பதை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்றைத துணைவேந்தர் சத்திர சிகிச்சை நிபுணர்களுக்கு எழுத்துமூலம் அறியத்தர வேண்டும்.

இத்தகைய உறுதிமொழி கொண்ட கடிதம் துணைவேந்தரிடம் இருந்து கிடைத்த உடனே சத்திரசிகிச்சை நிபுணர்கள் தங்கள் போதனைகளை ஆரம்பிப்பர். (ஐ-12)

# பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டம் நீடிப்பு

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தப் போராட்டம் தொடர்கின்றது.

சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட யாழ். பல்கலைக்கழகப் பதிவாளரை மீண்டும் இணைத்துக்கொள்ள யாழ். பல்கலைக்கழகப் பேரவை முயற்சி எடுத்துவருவதாகக் கூறி அதை ஆட்சேபித்தே ஊழியர்கள் இந்தப் போராட்டத்தை நான்காவது நாளாகத் தொடர்ந்து நேற்றும் மேற்கொண்டனர். இதனால், நேற்றும் பல்கலைக்கழகச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன.

நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோனதாஸ், ஊழியர் சங்கத் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பினார். ஊழியர் சங்க உறுப்பினர்களை உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு அழைப்பு விடுத்திருந்தார். இதனையடுத்து, தனது கோரிக்கை நிறைவேற்றப்படாமல் தமக்கு அழைப்புவிடுக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்த ஊழியர் சங்கத்தினர், துணைவேந்தரின் அலுவலகத்தின முன்னால் நின்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர் கலைந்துசென்று மீண்டும் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதனைத் தொடர்ந்து துணைவேந்தரின் கடிதத்திற்குப் பதில் கடிதம் ஒன்றையும் அவரிடம் கையளித்தனர். (ஐ-12)

# அமைச்சு செயலாளர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மீள் குடியமர்வுக்காக மேற்கொள்ளப்படும் திட்டங்களை புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சுச் செயலாளர் எம்.ஆர்.ஜயசிங்க நேற்றுப் பார்வையிட்டார்.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் அதிகாரிகளுடன் மணற்காட்டில் அமைக்கப்படும் தற்காலிக இருப்பிடங்களையும் நிரந்தர வீடுகள் அமையவிருக்கும் பகுதியையும் அவர் பார்வையிட்டார்.

அதன்பின், யாழ். நகரில் கலாசார மண்டபம் அமையவிருக்கும் பகுதியைப் பார்வையிட்ட செயலாளர், நூலகத்துக்குச் சென்று அங்குள்ள வசதிகளைப் பார்வையிட்டார்.(ஐ-3)

# இரு நபர்களுக்கு இடையிலான மோதலில் கிரனேட் வீச்சு!

## அரியாலைப் பகுதியில் சம்பவம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

அரியாலைப் பகுதியில் இரு நபர்களுக்கு இடையிலான மோதல் சம்பவத்தில் கைக்குண்டு பயன்படுத்தப்பட்டதாக முறையிடப்பட்டிருக்கிறது.

மோதலின் போது வீசப்பட்டதாகக் கூறப்படும கிரனேட் ஒன்றை வெடிக்காத நிலையில் படையினா மீட்டிருக்கின்றனர் - என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் அரியாலை பொன்னம்பல வீதியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

அரியாலை பொன்னம்பல வீதியைச் சேர்ந்த ஒருவருக்கும், பாஷையூரைச் சேர்ந்த நபர் ஒருவருக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதாகவும் அந்தச் சமயம் பாஷையூரைச் சேர்ந்த நபர் கைக்குண்டு ஒன்றை வீசியுள்ளார் என்றும தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று நண்பகல் சம்பவ இடத்திற்குச் சென்ற இராணுவத்தினர் வெடிக்காத நிலையில் இருந்த கைக்குண்டை மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை யாழ். பொலீஸார் ஆரம்பித்துள்ளனர். (ஐ-13)

# கடல் நீர் மட்டத்தில் அசாதாரண மாறுதல்கள்

வடமராட்சி,மார்ச்30

சுமாத்திராவில் ஏற்பட்ட பெரும் நிலநடுக்கத்தின் பின்னர் நேற்றையதினம் வடமராட்சி கடற்பரப்பில் நீர்மட்டம் அடிக்கடி வற்றுவதும் மேல் எழுவதுமாகக் காணப்பட்டது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை தொடக்கம் முற்பகல் 9 மணிவரையான காலப்பகுதியில் 7தடவைகள் கடல்நீர் வற்றுவதும் உயர்வதுமாகக் காணப்பட்டது. அசாதாரணமான இந்நிகழ்வு முக்கால் மணிநேரத்துக்கு ஒரு தடவை இடம்பெற்று வருகிறது. கடல்நீர் உயரும்போது வழமையை விட சுமார் 2அடி உயரத்துக்கு உயர்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சாதாரண காலங்களில இந்நிலை இருப்பதில்லை என்று மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ-70-173)

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்: கரணவாய், அளவெட்டி அணிகள் வெற்றி

வலி.வடக்கு,மார்ச்30

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ்.மாவட்டப்பிரிவின் ஆதரவுடனும் உதயன் ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகமும் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகமும் வெற்றி பெற்றுள்ளன.

முதலில் இடம்பெற்ற பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த நவசக்தி விளையாட்டுக் கழகத்திற்கும் கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையேயான ஆட்டத்தில் கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் நவசக்தி விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

மற்றோர் ஆட்டத்தில் யாழ். லீக்கைச் சேர்ந்த பாஷையூர் சென்.அன்ரனிஸ் வி.கவும் வலிகாமம் லீக்கைச்சேர்ந்த விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டதில் அளவெட்டி விநாயகர் விளையாட்டுக்கழகம் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

இருபோட்டிகளும் ஆரம்பமாகி முடிவடையும் வரை மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-86)

# சுமாத்திரா பூகம்பத்தில் 2ஆயிரம் பேர்வரை பலி!

ஜகார்த்தா,மார்ச்30

இந்தோனேஷியாவின் சுமாத்திரா தீவில் நேற்றுமுன்தினம் இரவு 11.09 மணிக்கு கடலுக்கடியில் 8.7 ரிச்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பம் இந்து சமுத்திர நாடுகளைப் பீதியில் உறையவைத்தது.

இந்தோனேஷியாவின் மேற்குப் பகுதியிலுள்ள சிறிய தீவான நியாஸில் நேற்றுமுன் தினம் நள்ளிரவுக்குப் பின்னர் ஏற்பட்ட பூகம்பத்தில் குறைந்தது இரண்டாயிரத்திற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருப்பர் என்று உப ஜனாதிபதி யூசுப் கர்லா தெரிவித்தார்.

டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பப் பேரலையைத் தொடர்ந்து மிகவும் அண்மையகாலத்தில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி பூகம்பம் மூன்று நிமிடங்கள் நீடித்தது என அதிகாரிகள் தெரிவித்தனர். நியாஸ் தீவின் பல வீதிகளில் விரிசல் ஏற்பட்டுள்ளது. மீட்புப் பணிகளில் பல்வேறு தரப்பினர்களும் ஈடுபட்டுள்ளனர்.

நியாஸ் தீவில் 300 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. காணாமறபோனவர்களைத் தேடும் பணிகளில் மீட்புப்பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தோனேஷியாவின் மேற்குப் பகுதியில் குணங்கிடோலி நகரில் 70 வீதமான வீடுகள் இடிந்து வீழ்ந்து தரைமட்டமாகியுள்ளன என்று அங்குள்ள செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

நியாஸ் தீவின் பிரதி ஆளுநர் ஆகாஷ் மென்ரோபா தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கையில், "27 ஆயிரம் சனத்தொகையைக் கொண்ட நியாஸ் தீவில் குறைந்தது 10 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பாதுகாப்புக்கருதி வெளியேறியுள்ளனர்" - என்று தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் இப்போது பதற்ற நிலை காணப்படுகிறது.

அதிக எண்ணிக்கையிலான மக்கள் சேதமடைந்த கட்டடங்களுக்குள் அகப்பட்டுள்ளனர் என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் ராய்ட்டர் செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

நியாஸ் தீவில் பல குடியிருப்புப் பகுதிகள் சேதமடைந்துள்ளமையால் பலர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர் என்றும் - பூகம்பப் பீதி இன்னமும் அப்பகுதி மக்களிடம் இருந்து அகலவில்லை என்றும் - செய்தியாளர்கள் கூறினர்.

# ஆஸி. காக்கஸ் தீவில் நேற்று ஆழிப்பேரலை

சிட்னி,மார்ச்30

இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவில் நேற்றுமுன்தினமிரவு ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து ஆஸ்திரேலியாவின் காக்கஸ் தீவுப் பகுதியில் நேற்றுக்காலை ஆழிப்பேரலை ஏற்பட்டதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் வடமேற்கே 2,700 கிலோ மீற்றர் தூரத்திலும், இந்தோனேஷியாவின் ஜாவா தீவிலிருந்து தென்மேற்கே 1,000 கிலோ மீற்றர் தூரத்திலும் இத்தீவு அமைந்துள்ளது.

கடலில் பேரலைகள் ஏற்பட்டு தரையைத் தாக்கியது என்றும் - இதனால் பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றும் - அதிகாரிகள் தெரிவித்தனர்.

சுமாத்திராவில் ஏற்பட்ட பூகம்பத்தால் ஆஸ்திரேலியாவின் காக்கஸ் தீவில் மட்டுமே ஆழிப் பேரலை ஏற்பட்டது.


உங்கள் விமானப் பயணத்திற்கு!

Aero Lanka

In Domestic Operation



New way of flying

Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626

Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600

Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979

Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519

யாழ் ⇆ கொழும்பு | யாழ் ⇆ திருகோணமலை ⇆ கொழும்பு



Jayoda ஜயோதா ජයෝද

உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6746611 முதல் 6759369 வரை

சீட்டிழுப்பு இல. 120 திகதி 28-3-2005

வெற்றி எண்கள் 9 1 6 2 2 7 | சுப்பர் எண் 25

சுப்பர் ஜக்பொட் பரிசு 2,21,89,825/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,21,89,825/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இரு[illegible] முதல் 4 எண்கள் | 113 | 5,000/- | 5,65,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,136 | 500/- | 5,68,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,325 | 50/- | 5,66,250/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 112,248 | 10/- | 1,122,480/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 116 | 1,000/- | 1,16,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,129 | 100/- | 1,12,900/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 11,225 | 20/- | 2,24,500/- |
| மொத்தம் | 137,323 | | 54,82,730/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 54,82,730/-

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 2,21,89,825/-

தொடர் இல. 7704109 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 மார்ச் 31 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 31 [illegible] வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6748051-0-06
6749700-1-01
6752000-5-94
6753884-6-97
6752739-3-00
6749742-2-07
6748478-1-09
6752518-5-55


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அரசை முடமாக்கும் பங்காளிக் கட்சி

இப்பத்தியில் நாம் பல தடவைகள் சுட்டிக்காட்டியமை போன்று கூடாதகூட்டத்தைக் கூட்டுச் சேர்த்துக்கொண்டதன் விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அளவுக்கு மிஞ்சித் துள்ளும் தனது அரசுக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.தினசரி கொடுக்கும் தொல்லையால், 'விழுங்கவும் முடியாமல், துப்பவும் முடியாமல் அவஸ்தைப்படுபவர் போல' அல்லாடுகின்றார் அவர்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்பி, ஆட்சியைக் கைப்பற்றிவிடவேண்டும் என்ற பதவி ஆசையில் - வெறியில் - அவாவில் - ஒரே இலக்கில் - அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலம் போலத் தாம் அமைத்த கூட்டமைப்பின் விளைவுகளை இப்போது எதிர்கொள்கின்றார் சந்திரிகா அம்மையார்.

சிங்களப் பௌத்த மேலாண்மைவாதிகளை ஜனாதிபதி அணி சேர்த்து, அவர்களைத் தமது அரசிலும், ஆட்சியிலும் அவர் இடம்பெறச்செய்ததால் இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் - சமாதான முறையில் - தீர்வுகாணும் முயற்சி பகல் கனவாயிற்று; குழம்பிப்போயிற்று.

ஜே.வி.பியினரின் உளுத்துப்போன பொருளாதாரக் கொள்கைக் கோட்பாடுகளுக்கு வளைந்து கொடுக்க வேண்டியிருப்பதால் அவர்களையும் இணைத்துக்கொண்டுள்ள இந்த அரசின் பொருளாதாரக் கொள்கைத் திட்டமும் அதன்மூலம் பாழ்பட்டுப்போகும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது.

நாட்டுக்குப் பெரும் கடன்சுமையை அள்ளித் தரும் - ஏற்றிவிடும்- துறையாக மின்சாரசபை மாறியிருக்கின்றது. அதனால், ஏற்கனவே 8 ஆயிரம் கோடி ரூபா நஷ்டம். பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு 800 கோடி ரூபாவைத் தாண்டுகின்றது.

தொடர்ந்து கட்டுமட்டில்லாத நஷ்டத்தை ஏற்படுத்தி, ஏற்கனவே மோசமடைந்திருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை இந்த இரு அமைப்புகளும் மேலும் மோசமாக்கி அதலபாதாளத்தில் வீழ்த்திவருகின்றன. இந்த இரு அரச அமைப்புகளினாலும் தினசரி நேர்ந்துவரும் நஷ்டத்தைத் தொடர்ந்து தாங்கும் பலம் இலங்கைக்கு இல்லை. இனிமேலும் இந்த இரண்டு வெள்ளை யானைகளையும் கட்டித் தீனிபோடமுடியாது எனக் கண்ட அரசு அவை இரண்டையும் மறுசீரமைப்பதற்கான புதிய திட்டம் ஒன்றை முன்வைத்தது.

ஆனால், ஆட்சிப் பங்கில் ஜே.வி.பியில் தங்கியிருக்கும் இந்த அரசின் இயலாத் தனத்தைப் பயன்படுத்தி, அந்த முயற்சியை முறியடித்துவிட்டது ஜே.வி.பி.

"இந்த இரு அரச அமைப்புகளிலும் பணிபுரியும் 14 ஆயிரம் ஊழியர்களின் சுயநலத் திட்டத்துக்கு அடிபணிந்து, இரண்டு கோடி நாட்டு மக்களின் வாழ்வோடு தொடர்புடைய நாட்டின் பொருளாதாரத்தைச் சீரழிக்க முடியாது; சீரழிக்கவிடமாட்டேன்" - என்று தேசிய தொலைக்காட்சியில் வீறாப்புப் பேசிய - இறுமாப்புக் கூறிய - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்த 24 மணித்தியாலயத்துக்குள் அடங்கிப்போனார்.

மின்சாரசபை மறுசீரமைப்பு, பெற்றோலியக் கூட்டுத்தாபனப் பங்குகளை விற்றல் ஆகியவை தொடர்பாகத் தமது கொள்கைத் திட்டத்தை ஜே.வி.பியின் எதிர்ப்புக் காரணமாகக் கைவிட்டு, ஜே.வி.பி. விதித்த நிலைப்பாட்டுக்கு அடிபணிந்து போகவேண்டிய நிலைக்குச் சந்திரிகாவின் அரசு தள்ளப்பட்டுள்ளது.

நாட்டை மிகமோசமாகப் பாதித்து, நஷ்டத்தை ஏற்படுத்தி, பொருளாதாரப் பின்னடைவை உருவாக்கி வரும் இந்த விடயத்திலேயே தனது சீராக்கல் திட்டத்தை முன்னெடுக்கமுடியாமல் "வெற்றிகரமாக பின்வாங்கும் இந்த அரசினால், சுமார் ஐந்து தசாப்தகாலமாகப் புரையோடிப்போய் நாட்டைச் சீரழித்து நிற்கும் இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காண்பதற்காகத் துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்கமுடியும் என எதிர்பார்ப்பது வெறும் பகல் கனவேயன்றி வேறில்லை.

பேரினவாதத்திலும், மேலாண்மைப் போக்கிலும் ஊறித் திளைத்துள்ள ஜே.வி.பியினரின் தீவிரப் போக்கை உதாசீனம் செய்து -தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் தீர்வு ஒன்றைத் தன்னால் பெற்றுத்தரமுடியும் என சந்திரிகா அரசு கூறுமானால் அது முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்ட விவகாரமாகவே இருக்கும்.

இந்த அரசை சரியான -நல்ல – நாட்டுக்கு நன்மை பயக்கின்ற – இணக்கமான தீர்வைப் பெற்றுத்தருகின்ற – திசையில் முன்னேறவிடாமல் முடமாக்கி வைத்திருக்கின்றது அதன் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி.

அந்தக் குறையை விலக்கி, தன்னைச் சீர்படுத்தாமல் இந்த அரசினால் இணக்கத் தீர்வு என்ற கொம்புத்தேனை எட்டுவது என்பது 'நடவாத' காரியமாகும்.

# வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் நாய்வளர்ப்போர் கவனத்துக்கு!

யாழ்ப்பாணம்,மார்ச்30

வலி.தென்மேற்கு, மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் நாய் வளர்ப்பவர்கள் பிரதேச சபையின் அனுமதி பெற்றே நாய் வளர்க்கவேண்டும்.

பிரதேச சபையின் அனுமதியின்றி நாய் வளர்ப்போர் மீது எதிர்வரும் 31 ஆம் திகதிக்குப் பின்னர் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் பி.விக்டர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதேச சபையின் அனுமதிபெற்று வளர்க்கப்படும் நாய்களுக்கு கருத்தடை, விசர் நோய்த் தடுப்பூசி மற்றும் நாய் வளர்ப்பதற்கான ஆலோசனை வழங்கப்படும். அத்துடன், பிரதேச சபையின் 'வளர்ப்பு நாய் குடும்ப அட்டை' பெற்ற நாய்களுக்கு உரிமத்தகடு, கழுத்துப்பட்டி என்பனவும் வழங்கப்படும்.

ஏனைய நாய்கள், கட்டாக்காலிகளாகக் கருதப்படும். அவை உயிர் ஆபத்தை விளைவிப்பன எனும் நோக்கில் நச்சு மருந்து வைத்து அழிக்கும் நடவடிக்கை 28 கிராமஅலுவலர் பிரிவுகள் ரீதியாகவும் நடைமுறைப்படுத்தப்படும்.

எனவே, கூட்டினுள் அடைத்தோ அல்லது கட்டியோ நாய்களை வளர்ப்பவர்கள் மானிப்பாய் உப அலுவலகம், ஆனைக்கோட்டை உப அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம், மாதகல் உப அலுவலகம் என்பனவற்றில் ஒன்றில் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் வருமான மேற்பார்வையாளர், பொறுப்பதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஊடாக ரூபா 50 செலுத்தி அனுமதி அட்டைகளைப் பெறமுடியும். அனுமதி அட்டை பெறாது நாய்வளர்ப்பவர்களுக்கு ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும்.

இவ்வாறு பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (ஓ-185)

# புற்று நோய் சிகிச்சை

குருநகர்,மார்ச்30

யாழ்.மாவட்டத்தில் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகளும் வைத்திய சிகிச்சைகளும் புற்றுநோய் நிபுணர் வைத்தியகலாநிதி எஸ்.ஜெயக்குமாரால் வழங்கப்பட்டு வருவதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் திங்கள், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 8மணிக்கும் -

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் புதன்கிழமை காலை 8மணிக்கும்-

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் திங்கள் பிற்பகல் 2 மணிக்கும் இந்த ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-51)

# பாடசாலைகளின் குறைதீர்க்க வேலைத்திட்டம்

வரணி,மார்ச்30

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் ஐந்தாண்டு வேலைத்திட்டம் ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாண கல்வித்திணைக்களம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

பாடசாலைகளில் பௌதிக தேவைகள், ஆசிரியர் வெற்றிடங்கள் மற்றும் அவசிய தேவைகள் ஆகியவற்றில் உள்ள குறைபாடுகளை உள்ளடக்கிய வினாக்கொத்துக்கள் இத்திட்டத்தின் கீழ் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அதன்மூலம் திரட்டப்படும் விவரங்களின் அடிப்படையில் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதே இத்திட்டத்தின் அடிப்படையாகும்.

2006 - 2010 வரையான காலப் பகுதியில் இத்திட்டத்தை நிறைவேற்ற மாகாண அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-170-203)

# ஹரித்தாஸ் நிறுவனத்தின் அதிகாரிகள் குழு வருகை

யாழ்ப்பாணம்,மார்ச்30

சுனாமி அனர்த்த வேலைத் திட்டங்களைப் பார்வையிட அகில உலக 'ஹரித்தாஸ்' நிறுவனத்தின் பொதுச்செயலாளரும் பிரதிநிதிகளும் மற்றும் பத்திரிகையாளர்களும் அடங்கிய குழு ஒன்று இலங்கை வருகிறது.

இக்குழுவினர் இன்று கொழும்பில் ஹரித்தாஸ் நிறுவனத்தின் இலங்கைக்கான இயக்குநர் டேமியன் பெர்னாண்டோவைச் சந்தித்து உரையாடுவார்கள்.

நாளை வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரும் இக்குழுவினர் 'கியூடெக்' நிறுவன இயக்குநர் அருட்திரு.ஜெயக்குமார் அடிகளைச் சந்தித்து உரையாடுவதுடன், உள்ளூர் பத்திரிகையாளர் சந்திப்பிலும் கலந்துகொள்வார்கள். பிற்பகல் 2மணிக்கு வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் சென்று சுனாமியால் சேதமடைந்த இடங்களைப் பார்வையிடுவார்கள்.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முல்லைத்தீவுக்குச் சென்று பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட பின்னர் குழுவினர் கம்பஹா மாவட்டத்திற்கும் நீர்கொழும்புக்கும் விஜயம் செய்வார்கள்.

இக்குழுவினர் கொழும்புக்கு வந்தவுடன் காலியில் இலங்கை ஆயர்களைச் சந்தித்த பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாந்தோட்டை மாவட்டத்தைப் பார்வையிட ஏற்பாடாகியிருந்தது.

(ஐ-173)

# துரை விஸ்வநாதன் ஞாபகார்த்தமாக கம்பன் கழகம் நடத்தும் போட்டிகள்

யாழ்ப்பாணம்,மார்ச்30

கொழும்பு கம்பன் கழகத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டியும் அமரர் துரை விஸ்வநாதனின் ஞாபகார்த்தமாகவும் கொழும்புக் கம்பன் கழகம் பேச்சு, கவிதைப் போட்டிகளை நடத்தவுள்ளது.

உடன் வழங்கப்படும் தலைப்பில் பேசக்கூடிய, கவிதை இயற்றும் திறமையுள்ள 25 வயதிற்குட்பட்டவர்கள் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.

போட்டிகளில் கலந்துகொள்ள விரும்புவோர் தமது சுயவிவரங்களுடன் கலந்துகொள்ளும் போட்டி பற்றிய விவரத்தையும் எழுதிக் கல்லூரி அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது கிராமசேவையாளர் ஆகியோரிடம் தம் தகைமைகளை உறுதிப்படுத்தி விண்ணப்பிக்கவேண்டும்.

விண்ணப்பங்களை செயலாளர், கொழும்புக் கம்பன் கழகம், 11, இராமகிருஷ்ண தோட்டம், கொழும்பு - 6 என்னும் முகவரிக்கு 15.04.2005 இற்கு முன்னர் கிடைக்கத் தக்கதாக அனுப்பிவைக்கலாம்.

இப்போட்டிகளில் இனங்காணப்படும் விசேட திறமையுள்ளவர்களுக்கு கம்பன் விழா நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புகள் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு போட்டியிலும் தேர்ந்தெடுக்கப்படும் முதல்மூன்று போட்டியாளர்களுக்கும் கம்பன் விழா மேடையில் அமரர் துரை விஸ்வநாதனின் ஞாபகார்த்த தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பிக்கும் போட்டியாளர்களுக்கு போட்டி பற்றிய முழு விவரங்களும் தனிப்பட்ட முறையில் அனுப்பி வைக்கப்படும் எனவும் மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் 2360525 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-203)

# 'தெய்வீக அருட்புகழ்' நூல், இறுவெட்டு வெளியீடு

வலி.தெற்கு,மார்ச்30

அருட்கவி சி.விநாசித்தம்பி 43 திருத்தலங்கள் மீது பாடிய பாடல்கள் அடங்கிய தெய்வீக அருட்புகழ் நூல் வெளியீடும் இறுவெட்டு வெளியீடும் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இணுவிலில் நடைபெற்றது.

இணுவில் ஸ்ரீ பரராசேகரப் பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் க.தேவராஜா தலைமையில் இந்த விழா நடைபெற்றது.

விழாவில் ஆசிரியர் ஞானதிருக்கேதீஸ்வரன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஓய்வு பெற்ற கலைப்பீடாதிபதி ப.கோபாலகிருஷ்ண ஐயர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இறுவெட்டு, நூல் வெளியீட்டுரையினை ஆசிரியர் என்.விஜயசுந்தரம் நிகழ்த்தினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் நூல் நயப்புரை வழங்கினார்.

இசைத்துறைக்கலைஞர்களான உ.இராதாகிருஷ்ணன், செல்வி பாக்கியலட்சுமி நடராசா, எஸ்.மகேந்திரன், சு.கணபதிப்பிள்ளை, வி.கே.நடராஜா, சி.சிவஞானராசா, திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன், த.றெபேட், வி.சிவஞானசேகரம், ரி.வரோதயன் ஆகியோர் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

அருட்கவி சி.விநாசித்தம்பி பதிலுரை வழங்கினார். (ஓ-152)

# புங்குடுதீவு கண்ணகை அம்மன் ஆலயக் கும்பாபிஷேகம் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்30

புங்குடுதீவு கண்ணகைபுரம் கண்ணகை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 6 மணி முதல் ஹோமமும் கோபுரக் கும்பாபிஷேகமும் நடைபெறும்.

காலை 9.15 மணிக்கு மகாகும்பாபிஷேகம் இடம்பெறும். முற்பகல் 10 மணிக்கு கண்ணகை தேவி மற்றும் பரிவாரமூர்த்திகளுக்கு அபிஷேகம் நடைபெறும்.

முற்பகல் 11.30 மணிக்கு மகா அபிஷேகம் பூஜை என்பன நடைபெற்று பின்னர் அன்னதானம் வழங்கப்படும்.

மாலை 6 மணிக்கு விசேடபூசை, தீபாராதனை, சுவாமி வீதியுலா வருதல் ஆகியன இடம்பெறும். தொடர்ந்து மாலை 7 மணிக்கு பிரபல பாடகர் எஸ்.ஜீ.சாந்தன் - ஸப்தஸ்வரா இசைக்குழு இணைந்து வழங்கும் பக்தி கீத இன்னிசை நிகழ்வு நடைபெறும். (ஓ-204)

## நாளை

பங்குனி 18
வியாழக்கிழமை
31.03.2005
திதி : ஷஷ்டி
முன்னிரவு 08.55 வரை.
நட்சத்திரம் : கேட்டை
முன்னிரவு 10.23 வரை.
சுபநேரம் : 07.41 - 09.11
[illegible]
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் நாடு திரும்பினார்

கிளிநொச்சி,மார்ச்30

ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவில் இடம்பெற்றிருந்த தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் நேற்றுமுன்தினம் நாடு திரும்பினார்.

ஐரோப்பிய நாடுகளில் அரச பிரதிநிதிகளுடான சந்திப்புக்களை அரசியல் குழு பூர்த்திசெய்துள்ளதையடுத்து நடேசன் நாடு திரும்பியுள்ளார். நேற்றுமுன்தினம் அதிகாலை 1.40 மணிக்கு கட்டுநாயக்கா வந்தடைந்த நடேசன், தரைமார்க்கமாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் ஓமந்தை ஊடாக கிளிநொச்சி வந்துசேர்ந்தார். இராணுவத்தினர் அவருக்கு ஓமந்தை வரை பாதுகாப்பு வழங்கினர்.

ஓமந்தையில் இருந்து தமிழீழக் காவல் துறையின் பாதுகாப்புடன் நேற்றுமுன்தினம் காலை 8 மணியளவில் அவர் கிளிநொச்சி வந்து சேர்ந்தார்.

கட்டுநாயக்காவில் இருந்து கிளிநொச்சிக்கு அவர் வருவதற்கு ஹெலி வசதி வழங்க அரசு மறுத்துவிட்டதையடுத்தே அவர் தரைமார்க்கமாக வந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் அரசியல் விவகாரக் குழுவைச் சேர்ந்த ஏனையோர் தொடர்ந்தும் ஐரோப்பாவில் வேறு பல சந்திப்புகளை முன்னிட்டுத் தங்கியுள்ளனர். (எ-3)

## உதயவாக்கு

காலத்தின் நிலையை அறிந்து கொள். காலமே உன் உயிர். அதை வீணாக்குவது உன்னையே நீ கொலை செய்துகொள்வது போலாகும்.

–ஜேம்ஸ்லேன்

வ
சிவமயம்

# நியூ வெஸ்ரன் சலூன்
## புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான தாரண வருடம் பங்குனி மாதம் 17ஆம் திகதி (30-03-2005) புதன்கிழமை முற்பகல் 9.31 மணி முதல் 11.07 மணி வரை வரும் இடபலக்கின சுப முகூர்த்த வேளையில், மானிப்பாய், உடுவில் வீதியில் அமைந்துள்ள புதிய கட்டடத்தில்

**நியூ வெஸ்ரன் சலூன்**

என்னும் புதிய ஸ்தாபனத்தைத் தொடங்கி நடத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமுகந்தந்து மேற்படி வைபவத்தைச் சிறப்பித்து எமது முயற்சிக்கு ஊக்கமும் ஆதரவும் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*தங்கள் நல்வரவை விரும்பும்:*

உடுவில் வீதி, மானிப்பாய். (43655)(26-18-34)

கணபதிப்பிள்ளை ஸ்ரீவழுதன் (ராசன்), மனைவி பரமேஸ்வரி.

# மாதகல் ஆலயத்துக்கு இராஜகோபுரம்

வலி.தென்மேற்கு,மார்ச்30

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கிழக்கு வாசல் இராஜ கோபுரம் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. ஆலய இந்து தர்ம பரிபாலன சபை கடந்த 26ஆம் திகதி நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் இராஜ கோபுரத்தை விரைவில் நிறுவுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வசித்து வரும் மாதகல் கிராமத் தைச் சேர்ந்த அம்மன் அடியார்கள் இந்த இராஜகோபுரம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்க முன் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

# சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு பரிவர்த்தனை நிலையம்

குருநகர்,மார்ச்30

யாழ்.பிரதி மாகாணச் சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உள்ளகத் தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் இந்த அலுவலகத்தின்கீழ் உள்ள கிளைகளுக்கு 15 தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப் படவுள்ளன. (ஒ)


பாடசாலை மாணவர்களுக்கான அரிய சந்தர்ப்பம்

விடுமுறைகாலத் தபால் மூலப் பாடநெறி
**SPOKEN ENGLISH**

அடிப்படை வசனங்களுக்கூடாக அடித்தளம், பழக்கப்படுத்தல் மூலமாக இலக்கணம், வசனங்களுக்கூடாகச் சொல்வளம்,

**இறுதிச் சந்தர்ப்பம்** ~~ரூபா 1000/-~~

31.03.2005 வரை சலுகைக் கட்டணம் :ரூ 250/-

விண்ணப்பங்களை பாடசாலை அதிபரிடமும் பெறலாம்

**சலுகைக் கட்டணத்துடன் சேருவதற்கு**

பெயர், வகுப்பு, பாடசாலை, மற்றும் முகவரி ஆகிய விபரங்களை நேரடியாக அல்லது **SAAMSTECH** என்ற பெயருக்கு **JAFFNA** தபாலகத்தில் மாற்றத்தக்கதான ரூபா 250 இற்கான காசுக்கட்டளையுடன் 31.03.2005க்குமுன் அனுப்பிச் சேரலாம்

SAAMSTECH, 841, Hospital Road, Chundikkuli, Jaffna.


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

*தோற்றம்* 08 – 09 – 1930



*மறைவு* 28 – 02 – 2005

## திருமதி கந்தசாமி கண்மணி

பாசமுடன் எம்மை வாழ வைத்த தெய்வமே!
மாதமொன்று சென்றதம்மா உம் முகம் பார்த்து
மாதமொன்று சென்றாலென்ன
வருடம் பல கழிந்தாலென்ன
கலையாத கனவுகளாய் உங்கள்
நினைவு எம்கண்களோடு என்றென்றும் கலந்திருக்கும்

*உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கேதுவுப் பிள்ளையாரைப் பணிந்து வணங்குகின்றோம்.*

இன்று (30.03.2005) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன் புடன் அழைக்கின்றோம்.

*கலைமகள் இல்லம், வாதரவத்தை, புத்தூர்.* (43654)(42-18-34-26)

கணவர்: பொ.கந்தசாமி
மகன்: தர்மகுலசிங்கம்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

# இருபாலையில் குடிதண்ணீர்த் திட்டம்

கோப்பாய் சாயி சமித்தி அனுசரணையுடன் இருபாலை கிழக்குப் பகுதி மக்களுக்கு குடிதண் ணீர் வழங்கும் திட்டம் ஒன்று கடந்த முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள் ளது. இந்த நடைமுறை மூலம் கணிசமான குடும் பங்கள் பயன்பெற்று வருகின்றன.(ஒ-72-203)

# பல்கலைக்கழக மாணவருக்கு!

யாழ்பல்கலைக்கழக அனைத்துப் மாணவர் களுக்குமான அவசரக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள் ளது. இதில் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி மாணவர் ஒன் றியம் கேட்டுள்ளது. (ஒ)

# சிறுகைத்தொழிலாளர் விவரம் சேகரிப்பு

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் சிறுகைத்தொழில் நிறுவனங்களின் விவரங்கள் திரட்டப்படுகிறது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாக விவ சாயம், வியாபாரம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு போன்றவை தவிர்ந்த ஏனைய சிறுகைத் தொழில்களில் ஈடுபடுவோர் குறித்தே விவரங் கள் திரட்டப்படுகின்றன.

சிறுகைத்தொழில் திணைக்களம் கிராமங் களில் உள்ள சிறுகைத்தொழில்களை அபி விருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வ தற்காகவே விவரங்கள் திரட்டப்பட்டு வருகின் றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-175-203)

# தொலைபேசி வழங்கக் கோரிக்கை

வலி.தென்மேற்கு,மார்ச்30

பணடத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்திய சாலைக்கு தொலைபேசி வசதி ஏற்படுத்தித் தருமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் யாழ்.சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளரிடம் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-135)

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



01-03-2005ஆம் நாள் சிவபதமெய்திய எமது குடும்ப விளக்கான

## திருமதி அப்பாத்துரை அபயலக்ஷ்மி

அவர்களின் மறைவையொட்டி எமக்கு பலவிதத்திலும் உதவி ஒத்தாசைகள் வழங்கியும், அனுதாபச்செய்திகள், அஞ்சலி மடல்கள் வழங்கியும் அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து எமக்கு ஆறுதல் கூறிய எமது உற்றார், உறவினர், நண்பர்கள் யாவர்க்கும் எமது குடும்பத்தி னர் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன், அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 31-03-2005 ஆம் நாள் வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறயிருப்பதால், அத்தருணம் நிகழவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன விருந்திலும், தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு:- இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுகொள்ளுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.**

சுந்தர்சன்,
அதிகார் செல்லமுத்து வீதி,
மானிப்பாய். (43652)(46-18-34-26)

-குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் வே.துரையப்பாவின்
முன்னாள் உரிமையாளர் - கணேஷ் அழககம் (நாச்சிமார் கோயிலடி)
மைத்துனராகிய

அமரர்
## விநாசி இராமலிங்கம்

பிறப்பு: 28-02-1927 இறப்பு: 28-02-2005

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசியிலும் துயர் பகிர்ந்தோருக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக் கும், பிரசுரம் வெளியிட்டும் சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக் கும் எமது நன்றிகள்.

இன்று (30-03-2005) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடை பெறுகின்ற வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற அம்பாளின் திருப்பாதங்களைத் துதிக்கின்றோம்.

"கணேஷ் அழககம்",
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (43649)(26-18-34)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
காங்கேசன்துறை சகோதரி, உற்றார்,
உறவினர்கள், நண்பர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் வ.ஐ.அம்பலவாணர் (நெடுந்தீவு)

*(முன்னாள் உரிமையாளர், மன்னார் ஸ்ரோஸ், மன்னார்)*

28-02-2005 திங்கட்கிழமை இறையடி எய்திய எங்கள் அன்புத் தெய்வத் தின் இறுதி நிகழ்வுகளில் கலந்துகொண்டோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், ஊழியர்களுக்கும், தபால் மூலமும் தொலைபேசி மூலமும் ஆறுதல் தெரிவித்தோருக்கும், அன்னார் வைத்தியசாலையில் இருந்தபோது உதவியும் ஆறுதலும் தெரிவித் தோருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று புதன்கிழமை (30-03-2005) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

261/5. கண்டி வீதி, யாழ்ப்பாணம். - குடும்பத்தினர்.

தகவல்: *செல்வி ல். அம்பலவாணர் (மகள்).* (43647)(26-18-34)


நிறைஞ்சனாஸ் சங்கானை
மாதவன், சதா, விவேக் நடித்த
**எதிரி** (ரீல்ஸ்)
கா.நேரம்: 11.00, 2.45, 6.00. (பு.நே)
(C/41377)(29-16-17)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது
சரத்குமார்,நமிதா, வடிவேல் நடித்த
**ஏய்** (ரீல்ஸ்)
கா.நேரம்: 10.30. 2.30, 6.30, 9.30 (பு.நே.)
விரைவில் **குருதேவா**
(C/41486) (22-11-45)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
பிரசாந், வடிவேல், மும்தாஜ் நடித்த
**லண்டன்** (ரீல்ஸ்)
இயக்கம்: சுந்தர்C
ரீக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)
(C/41381)(29-16-17)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
சூர்யா, ஜோதிகா நடித்த
**மாயாவி** (ரீல்ஸ்)
தினசரி 11.00. 3.00. 7.00 (பு.நே.)
(C/41380)(29-16-17)

மனோகரா யாழ்ப்பாணம்
பார்த்திபன், காவேரி, மாஸ்டர் அஸ்வின் நடித்த
**கண்ணாடி பூக்கள்** (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
(C/41378)(29-16-17)


# மரண அறிவித்தல்

## திருமதி சவுந்தரம் இராமலிங்கம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சவுந்தரம் இராமலிங்கம் 28-03-2005 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் சி.இராமலிங்கம் (செல்லம் - ஓய்வுபெற்ற PWD ஓவ சியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லம்மா அவர்களின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை ஆகியோரின் மரு மகளும் அன்னபூரணம், காலஞ்சென்றவர்களான கந்தையா, சோம சுந்தரம், வன்னியசிங்கம், தம்பாப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் மகேந்திரன் (பொறியியலாளர் - Canada), கமலாம்பிகை, பாலாம்பிகை, லலிதாம்பிகை (பிரதேச செயலகம் - நல்லூர்), விமலாம்பிகை, சுகிலாம்பிகை ஆகியோரின் அன்புத் தாயாரும் நளாயினி (Canada), காலஞ்சென்றவர்களான சின்னத்துரை (நிர்வாக உத்தியோகத்தர், கோப்பாய்), சண்முக நாதன் (முகாமையாளர், இலங்கை வங்கி) மற்றும் விநாயகமூர்த்தி (RDA வவுனியா), சோதிலிங்கம் (முன்னாள் சிரேஷ்ட வட/கிழக்கு பிராந்திய முகாமையாளர் HNB), நிர்மலேந்திரன் (நில அளவை யாளர்) ஆகியோரின் மாமியாரும் ரமணன், நிமலன், ஜனனி (Canada), சுதாஜினி (ஆசிரியை - புத்தளம்), சுதர்சன் (London), தயாளன் (London), அனுஷா (Australia), குணாளன் (பொறி யியற்பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), ரஜீவன் (சுகாதார அமைச்சு - கொழும்பு), மயூரன் (London), நிருபன் (முகாமைத் துவம், யாழ். பல்கலைக்கழகம்), சுஜீவன் (பொறியியற்பீடம், மொறட் டுவ பல்கலைக்கழகம்), கோகுலன், சுரேன் (Canada), துஷ்யந்தி, தீபன் (பொறியியற்பீடம், மொறட்டுவ பல்கலைக்கழகம்), நிரோஷன், சரண்யா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நிவாஷன், லக்சிகா, குகன், காயத்திரி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (31-03-2005) வியாழக்கிழமை காலை 8.30 மணிமுதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, 4 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

10, Fairline Rd.,
Dehiwala.
2735625. (43648) (24-18-34-26)

தகவல்:
சி.இராமலிங்கம் (கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் கிரிக்கெட் ஆட்டம்

# மத்திய கல்லூரியை வென்றது சென்.ஜோன்ஸ் கல்லூரி

குருநகர்,மார்ச்30

சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்.மத்திய கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்ற - 11 பேர் பங்குகொண்ட 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட ஒரு நாள் துடுப்பாட்டப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி மூன்று விக்கெட்டினால் வெற்றிபெற்றது.

"வடக்கின் பெரும் போர்" என வர்ணிக்கப் படும் மாபெரும் துடுப்பாட்டத்தின் தொடர்ச்சி யாக வருடாவருடம் இடம்பெறும் இந்த ஒருநாள் ஆட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத் தாடுவதாகத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 47 ஓவர்களில் அனைத்து விக் கெட்டுக்களையும் இழந்து 110 ஓட்டங்களைப் பெற்றது.

நவநீத் 28 ஓட்டங்களையும், சுதர்சன் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

நிருபன் 10 ஓவர்கள் பந்துவீசி 18 ஓட்டங் களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், கஜ ரூபன் 8.4 ஓவர்கள் பந்துவீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் மயூரதன் 8 ஓவர்கள பந்துவீசி 8 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

111 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களம் இறங்கிய சென்.ஜோன்ஸ் கல் லூரி அணி 33 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்று மூன்று விக் கெட்டுக்களினால் வெற்றிபெற்றது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக அணித் தலைவர் மதன்ராஜ் 39 ஓட்டங்களையும், சகிந் தன் 22 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றனர்.

மத்திய கல்லூரி வீரர்கள் சத்தியன் 10 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைக் கொடுதது 2 விக்கெட்டுக்களையும் கலிஸ்ரன் 5.4 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக் கெட்டினையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் ஆட்டநாயகனாக சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த நிருபன் தெரிவு செய்யப்பட்டார்.

அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரருக்கான உலகத் தமிழர் வானொலியின் விருதினை சென். ஜோனஸ் கல்லூரி அணித் தலைவர் மதன்ராஜ் பெற்றுக்கொண்டார்.

இப்போட்டிக்கு அனுசரணையை உலக தமி ழர் வானொலி வழங்கியிருந்தது குறிப்பிடத்தக் கது.

இப்போட்டிக்கு நடுவர்களாக ஆர்.சிறிதரன், கே.நாதன் ஆகியோர் கடமையாற்றினர்.

சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி தொடர்ந்து மூன்றாவது வருடமாக வெற்றி பெற்றது குறிப் பிடத்தக்கது. (3-51-190)

# இளைஞர் அணி வெற்றி பெற்றது

யாழ்ப்பாணம்,மார்ச்30

ஈச்சமோட்டை சனசமூக நிலைய விளை யாட்டுக் குழுவினரினால் உயிர்ப்பு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட 11 பேர் பங்குகொள் ளும் 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட - மென்பந்துக் கிரிக்கெட் போட்டியில் இளை ஞர் அணி 3 விக்கெட்டினால் வெற்றி பெற் றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஈச்சமோட்டை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தா டிய சம்சாரி அணியினர் 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டனர்.

விஜய தெய்வேந்திரா 30 ஓட்டங்களை யும் தவநேசன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் துவாரகன் நான்கு ஓவர்கள் பந்துவீசி 21ஓட்டங்களைக் கொடுத்து 3 விக் கெட்டுக்களை வீழ்த்தினார்.

96 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி எனற நிலையில் களம் இறங்கிய இளைஞர் அணி 19 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது.

துவாரகன் 50 ஓட்டங்களையும் சோதிசன் 14 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற் றுக் கொடுத்தனர். (3-190)

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம்: சென்.மைக்கல், தென்மராட்சி அணிகள் மோதல்

யாழ்ப்பாணம்,மார்ச்30

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமி யால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச் சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ்.மாவட்ட பிரிவின் ஆதரவுடனும் 'உதயன்' ஊடக அனுசரணையுடனும் வலிகாமம் லீக் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சென்.மைக்கல் வி.கவும் தென்மராட்சி வி.கவும் மோதுகின்றன.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் ஆட்டத்திலேயே இந்த அணிகள் மோதுகின்றன.

மாலை 5 மணிக்கு நடைபெறும் ஆட்டத் தில் றேஞ்சஸ்ஸ் வி.கவும் பாடும் மீன் வி.கவும் மோதவிருக்கின்றன. (3-86)

# எல்லைப்படை மாவீரர் நினைவு உதைபந்தாட்டம்: ஒருபார்வை

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி மாவட்ட விளை யாட்டுக் கழகம் கலந்துகொண்ட ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது.

கிளிநொச்சி மாவட்டம் வட்டக்கச்சியைச் சேர்ந்த லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்கும் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த சில்வஸ்டார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே முதல் ஆட்டம் இடம்பெற்றது.

இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடியபோதிலும் சில்வஸ்டார் விளையாட் டுக் கழகம் முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது.

சில்வஸ்டார் அணியின் முன்னணி வீரர் சிவானந்தன் மிகவும் மெதுவாகப் பந்தை நகர்த் திக்கொண்டுவர கோல் காப்பாளர் அடுத்த கட்டமாக முன்நகர்வதா இல்லையேல் நின்ற இடத்தில் தடுப்பதா எனத் தீர்மானிப்பதற்குத் தடுமாற, சிவானந்தன் பந்தை அடித்து தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார். இதனையடுத்து கூடிய உத்வேகத்து டன் இரு அணிகளும் மோதத் தொடங்கின.

உதயன் ஊடக அனுசரணை

எதிரணியினர் கோல் பெற்றதைத் தொடர்ந்து லக்கிஸ்ரார் அணியினர் கோல்களைப் பெறுவ தற்காகக் கடும் முயற்சியுடன் விளையாடினார் கள்.

லக்கி ஸ்ரார் இடது முன்னணி வீரர் நிரோ ஜன் தனது நிலையில் இருந்து இடம்மாறிச் சற்றுப் பின்சென்று அங்கிருந்து பந்தை நகர்த்தி வந்து எதிரணியினரின் தாக்குதல்களை முறியடித்து இடதுபகக மூலை உதை எல்லைக்குச் சற்று அப்பால் வைத்து உதைத்து, தனது அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டார்.

சமநிலைக்கு வந்ததும் இரு அணியினரும் புதிய உத்வேகத்துடன் மோதத் தொடங்கினர். இநநிலையில் இரு அணி வீரர்களும் விதி மீறலாக விளையாடி நேர் உதைகளை எதிரணி யினருக்கு வழங்கியும் வந்தார்கள்.

லக்கி ஸ்டார் அணியின் வலதுபக்க முன்னணி வீரர் ஜெயந்தன் தனக்கு முன்னணி வீரர் தட்டிக்கொடுத்த பந்தை எதிரணி வீரரை வெட்டி அடித்து கோலாக்கிக்கொண்டார்.

முதல் பாதி ஆட்டம் லக்கி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 2 இற்கு 1 என்ற கோல் கணக் கில் முன்னணியில் இருந்தபோது முடிவுக்கு வந்தது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பம் முதல் முடிவுவரை இரு அணிகளுக்கும் சோதனை யாக அமைந்தது. இரு அணிகளுமே கோல்களைப் பெறக் கடும் பிரயத்தனத்தில் ஈடு பட்டதுடன் எதிரணியினர் கோல்கள் பெறாமலும் தடுத்து ஆடினார்கள்.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் எதிரணியினர்களால் தொடர்ந்து முறியடிக்கப்பட்டன. கோல் கம்பங்களை நோக்கி அடிக் கப்பட்ட பந்து கூட வெளியால் சென்றதாலும் கோல் கீப்பர்களினால் தடுக்கப்பட்டமையாலும் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை.

ஆட்டம் முடிவடையும்போது லக்கிஸ்டார் விளையாட்டுக் கழகம் 2 இற்கு 1 என்ற கோல்கணக்கில் சில்வஸ்டார் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது.

சில்வஸ்டார் வீரர் ஒருவர் இறுதி நேரத்தில் மஞ்சள் அட்டை காட்டி மத்தியஸ்தரினால் எச்சரிக்கப்பட்டார்.

இரண்டாவது ஆட்டத்தில் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும், அளவெட்டி கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் நான்கு கோல்களைப் பெற்றுக்கொண்டது.

ஞானமுருகன் அணியின் சார்பில் முன்னணி வீரர் தசரதன் தனக்கு கிடைத்த பந்தை இலகுவாகக் கோல் கம்பத்தினுள் அடித்து கோலாக்கிக்கொண்டார். இதனைத் தொடர்ந்து முன்னணி வீரர் பாக்கியராசா இரண்டாவது கோலையும் தொடர்ந்து 3, 4ஆவது கோல்களை தசரதனும் பெற்றுக்கொண்டனர். முதல் பாதி ஆட்டம் ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் 4 கோல்களைப் பெற்று முன்னணியில் இருக்கும்போது முற்றுப்பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டம் ஆரம்பமாகி சில நிமிட நேரத்திலேயே முன்னணி வீரர் வரன் 5ஆவது கோலைப் பெற்றுக்கொண்டார். இதனைத் தொடர்ந்தும் பின்னணியில் நின்ற வீரர் பாபு முன்சென்று விளையாடத் தொடங்கி இருந்தார்.

மீண்டும் 6ஆவது கோலை தசரதனும், 7ஆவது. கோலை பாபுவும் 8ஆவது கோலை தசர தனும் 9 ஆவது கோலை பாக்கியராசாவும் பெற்றுக்கொண்டனர்.

இப்போட்டியில் தசரதன் ஆகக்கூடிய கோல்களாக ஐந்து கோல்களைப் பெற்றுக் கொண்டார். இதேபோன்று முதல் சுற்றில் யாழ். லீக்கைச் சேர்ந்த றோயல் விளையாட்டுக் கழகம் 7 கோல்களைப் பெற்றுக்கொண்டமையே இப்போட்டியில் பெற்றுக்கொண்ட ஆகக் கூடிய கோல்களாகும்.

நேற்றுமுன்தினம் வலிகாமம் லீக்கைச் சேர்ந்த ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் பெற்றுக்கொண்ட 9 கோல்களே இப்போட்டியில் ஓர் அணி பெற்றுக்கொண்ட அதிகூடிய கோல் களாகும்.

இந்த அணியை எதிர்த்து விளையாடிய கலைவாணி விளையாட்டுக்கழகம் முதல் சுற்றில் எதிரணியினர் சமுகம் கொடுக்காமையால் இரண்டாம் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஒ-86)

# மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட்: பாகிஸ்தான் பரபரப்பு வெற்றி



வெற்றிக் களிப்பில் பாகிஸ்தான் அணி வீரர்கள்.

இந்தியாவின் பெங்களூரில் நடைபெற்ற பாகிஸ்தான் - இந்தியா இடையேயான மூன் றாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் பரபரப் பான வெற்றியைப் பெற்று, 3 போட்டிகள் கொண்ட தொடரை 1-1 என சமன் செய்தது பாகிஸ்தான் அணி. ஆட்டத்தைச் சமன் செய்யும் நோக்கிலேயே விளையாடிய இந்திய அணி 214 ஓட்டங்களுக்கு இரண்டாவது இன்னிங்ஸை இழந்து, 168 ஓட்டங்களில் தோல்வியுற்றது.

இந்த வெற்றி மூலம் கொல்கத்தாவில் பெற்ற தோல்விக்குப் பழிதீர்த்துக்கொண்டது பாகிஸ்தான் அணி. மொகாலியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் 'டிரா' ஆனது.

383 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றிபெற லாம் என்ற இலக்குடன் 2ஆவது இன்னிங் ஸைத் தொடங்கத் தள்ளப்பட்ட இந்தியா, ஞாயிற்றுக்கிழமை முடிவில் விக்கெட் இழப் பின்றி 25 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. காம் பீரும் ஷேவாக்கும் நம்பிக்கையான ஆட்டத்தை அளித்து வந்தனர்.

நேற்றுமுன்தினம் கடைசி நாள் ஆட்டத் தைத் தொடங்கிய இருவரும் சிறப்பாக ஆடிக் கொண்டிருந்தனர். இந்நிலையில் காம்பீரின் தவறான அழைப்பால், தடுமாறிய ஷேவாக் 'ரன் அவுட்' ஆனமை ஆட்டத்துக்குத் திருப்பமாக அமைந்தது.

அதன் பிறகு காம்பீரும் ஆட்டமிழந்தார். அவர் 52 ஓட்டங்களைப பெற்றிருந்தபோது சமி வீசிய பந்தில் 'எல்.பி.டபிள்யூ' ஆகி வெளியேறி னார்.

பின்னர் டிராவிட்டுடன் ஜோடி சேர்ந்தார் சச்சின். வழக்கத்துக்கு மாறாக தற்காப்பு ஆட் டத்தை அவர் மேற்கொண்டார்.

அதேசமயம், பெரும்பாலான வீரர்களை துடுப் பாட்டவீரருக்கு அருகிலேயே நிற்கவைத்து களத்தடுப்பை இறுக்கினார் பாக்.அணித் தலை வர் இன்ஸமாம். என்றாலும் அடிக்கவேண்டிய பந்துகளைக் கூட சச்சின் உள்ளிட்டோர் தைரி யமாக எதிர்கொள்ளமால், பாதுகாப்பு ஆட் டத்தை மேற்கொண்டனர்.

சச்சின் உள்ளிட்டோர் வெகுநேரம் களத் தில் இருந்தாலும் அணியின் ஓட்டங்கள் உயர வில்லை.

இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் 6 ஓவர்கள் மட்டுமே மீதமிருந்த நிலையில் இந்தியா தோல்வியைத் தழுவியது.

இத்தோல்வியால் இந்தியா தொடரை இழந் தது மட்டுமல்லாமல் சர்வதேசக் கிரிக்கெட் சபை தரப்பட்டியலில் கிடைக்கவேண்டிய முன் னேற்றமும் கிடைக்காமல்போனது. சமன் செய் தால்கூட இங்கிலாந்தைப் பின்னுக்குத் தள்ளி யிருக்க முடியும். தோல்வியுற்றதால் 3 ஆவது இடத்திலேயே இருக்கவேண்டியதாயிற்று.

இந்திய வீரர் வீரேந்தர் ஷேவாக் தொடர் நாயகனாகவும், பாக். வீரர் யூனிஸ்கான் ஆட்ட நாயகனாகவும் தேர்வுபெற்றனர். (ஒ)

# மெய்வன்மைப் போட்டி

கோண்டாவில்,மார்ச்30

கல்வியங்காடு இந்து தமிழ்கலவன் பாட சாலையின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை மைதானத்தில் அதி பர் திருமதி த.கமலராஜா தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய முன்னாள் ஆரம்பக் கல்வி உதவிப் பணிப்பாளர் திருமதி கமலா சுப்பிரமணி யமும் சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் வ.கேதீஸ் வர சர்மாவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

முன்னர் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்ட இந்த விளையாட்டுப் போட்டி தவிர்க்கமுடியாத காரணத்தால் இன்றைய தினத்துக்கு ஒத்திவைக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-49)

# காரைநகர் பிரிவு தடகள விளையாட்டு ஏப்ரலில் நடக்கும்

யாழ்ப்பாணம்,மார்ச்30

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப்போட்டி அடுத்த மாதம் 23,24ஆம் திகதிகளில் காரைநகர் தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடை பெறவுள்ளது.

கழகங்களின் தலைவர், செயலாளர்கள் தங்களுடைய கழகக் கொடியினை உதவி அரச பணிமனையில் அடுத்தமாதம் 15ஆம் திகதிக்கு முன் ஒப்படைக்குமாறு விளையாட்டு உத்தி யோகத்தர் தி.துரைசிங்கம் கேட்டுள்ளார். (3-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வுபெறும் அதிபர்

வலி.தென்மேற்கு, மார்ச் 30

பண்ணாகம் வடக்கு அமெரிக்க மிஷன் த.க.பாடசாலையில் கடந்த ஏழு வருடகாலமாக அதிபராகப் பணிபுரிந்துவந்த க.இரத்தினேஸ்வரன் கடந்த 23ஆம் திகதி முதல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இவருக்கு சேவை நலன் பாராட்டு விழாவைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. (8-135)

## மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சி

வலி.தென்மேற்கு, மார்ச்30

மானிப்பாய், சங்கானை, பண்டத்தரிப்பு ஆகிய பொதுச் சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் வீழ்ச்சியடைந்து வருகின்றன.

உள்ளூரில் விவசாயிகள் உற்பத்தி செய்த மரக்கறிகள் பெருமளவில் சந்தைகளுக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுவதால் இந்த விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, சின்ன வெங்காயத்தின் விலையும் குறைந்துள்ளது. தற்போது தைப் போக வெங்காயச் செய்கையின் அறுவடை விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(8-135)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே, நமஹ

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் பங்குனி மாதம் 17 ஆம் நாள் இன்று (30.03.2005) புதன்கிழமை காலை 8.47 மணிமுதல் 9.56 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது ஏக புத்திரன்
**கஜேந்திரன்**
(கஜன்)
அவர்களுக்கும்



எமது புத்திரி
**மதிவதனி**
(மதி)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் கொண்டு கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயத்தில் திருமாங்கல்யதாரணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி ச.நவரத்தினம்
557/7, மதவடி ஒழுங்கை,
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

திரு.திருமதி செ.இராஜதுரை
56, கேசாவில் பிள்ளையார் வீதி,
யாழ்ப்பாணம்.
(43629)(21-11-16-24)

# அரசின் பின்வாங்கல் தமக்கு வெற்றியாம்; மார் தட்டுகின்றன தொழிற் சங்கங்கள்!

கொழும்பு,மார்ச்30

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன பங்கு விற்பனை என்பன தொடர்பில் நேற்றுமுன்தினம் நடைபெறவிருந்த விசேட அமைச்சரவைக் கூட்டம் ரத்து செய்யப்பட்டமையானது தமது போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியென மின்சாரசபை மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன கூட்டுத் தொழிற்சங்கங்களின் தலைவர்கள் நேற்றுமுன்தினம் உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தனர்.

முன்னதாக, நேற்றுமுன்தினம் நண்பகல் மேற்படி இரு துறைகளைச் சேர்ந்த தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களான சுமார் 14ஆயிரம் பேர் நாடளாவிய ரீதியில் கடமைகளை இடைநிறுத்தியிருந்தனர். நேற்று மாலை வரை இந்தத் துறைகளின் பணிகள் ஸ்தம்பிதமடைந்தன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் கருத்துத் தெரிவித்த பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கப் பிரதிநிதியான லக்ஷ்மன் ஆனந்த, விசேட அமைச்சரவைக் கூட்டம் இடைநிறுத்தப்பட்டமை வெற்றியென்றாலும், இது தற்காலிகமான ஒன்றென்றும், இந்தப் பிரச்சினைக்கு உறுதியான இறுதித் தீர்வு கிடைக்கும்வரை தமது போராட்டம் தொடருமென்றும் கூறினார்.

அதுகுறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை மின்சாரசபையின் தொழிற்சங்கத் தலைவர் ரஞ்சன் ஜயலால், அரச தலைமைத்துவத்தின் இந்த முடிவை நம்பமுடியாதென்றும், உறுதியானதொரு தீர்மானம் கிடைக்கும் வரை தொழிற்சங்க நடவடிக்கைகளைக் கைவிடப் போவதில்லை யென்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை, நேற்றைய விசேட அமைச்சரவைக் கூட்டம் ரத்துச் செய்யப்பட்டமை குறித்து ஜனாதிபதி செயலகமும், மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சும் நேற்றுமாலை சம்பந்தப்பட்ட தொழிற்சங்கங்களுக்கு உத்தியோக பூர்வமாக எழுத்து மூலம் அறிவித்துள்ளன.

(எ-க)


# பூம்பொழில்

எம்மிடம்.....! விற்பனைக்குண்டு...!

- நவீன தொலைக்காட்சிப் பெட்டி SONY (1)
- கையடக்க ஒளிப்பதிவுக் கருவி SONY (1)
- புகைப்படக் கருவி MINOLTA (1)
- மின்பிறப்பாக்கி 2000 W JANMAR JAPAN
- இரண்டு BOX - SAP BOOFAR 1 - SOL
- மின்பிறப்பாக்கி 1000 W HONDA - JAPAN
- திரைப்பட ஒளி நாடாக்கள் 250

(21-11-16) (43616)

உடனடியாக இவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

0776170686
0776568166

**பூம்பொழில்**
ஒலிப்பதிவுப் புகைப்படக் கலையகம்
நுணாவில், பருத்தித்துறை வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
தங்கம், வெள்ளி நகை வாணிபம் – கோழிப்பண்ணை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். விலை ரூபா 280.
கோழிமுட்டைகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.



உ
# ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து வந்துள்ள
**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**

கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகைமூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**அறை எண் 5, பிள்ளையார் இன்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna.
Phone: 021 222 2839
Mobile: 0776 923623.

(C/41868)(26-21-11-16)


# 26ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் **எஸ்.கே.சிவபாலன்** (பேராசிரியர்)

(அண்ணாமலைப் பல்கலைக் கழகம் – சிதம்பரம்)

புகழ்பூத்த கலைஞரும் இசை மேதையும் பட்டங்கள் 29 - முக்கியமாகத் திருமுறைச் செல்வமணி, பண்ணிசைக் கலாநிதி, சங்கீதவித்துவான், பாரத ரத்தினா, பண்ணிசைக் கற்பகம், பண்ணிசை வேந்தர் வேந்தன், இசைக்குரிசில் போன்ற வற்றைப் பெற்றவரும் சாகித்திய மண்டலப் பரிசும் ஜனாதிபதி விருதும் பெற்று இரு ஒலிப்பேழைகளான திருவாசகம் எனும் தேன், பண்ணிசைப் பாமாலை மற்றும் கர்நாடக சங்கீத பண்ணிசை ஆய்வுநூல் 7, வெளியீடு செய்தும் தமிழகத்துக்கும் தாயகத்துக்கும் ஓர் அன்புப் பாலத்தை இணைத்தும் தில்லை நடராஜர் திருவடி நீழலை அடைந்த இவரை இன்று நினைவுகூருகின்றோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!*

"கணேசபதி"
ஸ்ரீ கணேச வித்தியாசாலை ஒழுங்கை,
சித்தன்கேணி.

-சகோதர, சகோதரிகள்.

(43611)(46-21-11-16)

# முடிவில்லாத் துயரலையில் மூன்றாவது ஆண்டு



மலர்வு 22 - 02 - 1967

உதிர்வு 30 - 03 - 2002

# திருமதி அ.றமிலா

கண்ணெட்டாத் தொலைவுசென்று
களிப்புடனே வாழ்வாயென்று
எண்ணங்கள் பல சுமந்தேன்
இகம் புகழ வருவாயென்று
திண்ணமது மனதில் கொண்டு
தினமுவகையோடு நின்று
அன்னையிவள் ஆவல் கொண்டேன்
அகம் குளிரக் காண்பே னென்று !

விண்ணளந்த பெருமைகாண
காத்து மனம் தவித்த வேளை
விண்வெளியால் வந்ததோ நின்
பொன்னுடலைச் சுமந்த பேழை – என்
எண்ணமதில் மண்விழுந்ததே !
என்செய்வேன் விதியின் சதி தான் !
கண்ணே நான் எண்ணுகிறேன் – நின்
காலடியில் வரும் நாளை

நாகம்மாள் வீதி,
உடுவில், சுன்னாகம்.

அம்மா,
தம்பி - கொலின் (கனடா),
மகன் -ஜொகான்சன்,
மகள் - றேச்சர்.

(C/41865)(50-)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனியொரு போர் என்றால் அது எமது உரிமைப் போரே; ஆகையால் உயிரை இழந்தேனும் நிலத்தைப் பெறுவோம்

## வடமராட்சிப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

கரவெட்டி,மார்ச்30

தமிழ் மக்களாகிய எமது கோரிக்கைகளை அரசு புறந்தள்ளி வருகின்றது. எமது பிரச்சினைகளுக்குத் தொடர்ந்தும் முக்கியத்துவமளிக்கத்தவறின் மிகுந்த மனவிரக்தியுடன் வாழும் நாம் எமது சொந்த நிலத்தில் வலிந்து போராடி வாழவேண்டிய நிலை ஏற்படும். இதனால், நாமும் படைகளும் உயிர்ச் சேதங்களுக்கு உள்ளாகலாம். இது எமது உரிமைப் போராகையால் உணர்வுடன் உயிரை இழந்தேனும் எமது நிலத்தைப் பெறுவோம்.

இவ்வாறு வடமராட்சிப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றுமுன்தினம் நடத்திய பேரணியின் முடிவில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை அரசும் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்டு மூன்று வருடங்கள் நகர்ந்துவிட்ட நிலையிலும் 2004 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்று ஓராண்டு நிறைவடையும் காலம் உருண்டோடிய நிலையிலும், தங்கள் தலைமையிலான அரசு தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் எதனையும் வழங்காத நிலைகண்டு வேதனை அடைகின்றோம்.

ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பே பேச்சுக்கள் ஒரு இறுதித்தீர்வை எட்டுவதற்கான சூழலில் அரசைக் கலைத்து தங்களுக்குச் சார்பான ஓர் அரசமைப்பை உருவாக்கிய பின்னர்கூட தாங்கள் பேச்சுக்கான எந்த ஒரு சமிக்ஞையினையும் காட்டாதிருப்பது தாங்கள் எமது உரிமைகளை வழங்கத் தடையாக உள்ளமையாகவே நாம் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக, தங்களின் தலைமையில் நாட்டை ஆளும் கட்சித் தலைமைகள் இருந்தபோதும் நடந்தவைகள் பேச்சைக் குழப்பிப் போருக்கான சூழலை உருவாக்கும் நடவடிக்கைகளாகவே இருக்கின்றன.

உயர் பாதுகாப்பு வலயம் மீண்டும் பலப்படுத்துவது, பயன்தரு விளைநிலங்களை ஆக்கிரமிப்பது, கடற்றொழில் செய்வதற்குக் கட்டுப்பாடுகள் உருவாக்குவது, எமது ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளைக் கொலைசெய்வது, பொதுமக்கள் மீது இராணுவ அடாவடித் தனங்களை நடத்துவது, பெண்கள் மீதும் பாலியல்வல்லுறவு மேற்கொள்ள எத்தனிப்பது, உயர் பாடசாலைகளை உயர் பாதுகாப்பு வலயமாக்கியிருப்பது, சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளில் எம்மைப் புறக்கணித்துள்ளமை, பொதுக கட்டமைப்புகளில் புரிந்துணர்வு இல்லாமை, நடுநிலைமையான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை என இவ்வாறு தாங்கள் எம்மைப் பற்றிச் சிந்திக்காத செயற்பாடுகளை




வெளிக்காட்டும் பட்டியலை நீடித்துக் கொண்டே போகலாம்.

இந்தநிலையில், இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பும், பயிற்சி வழங்கலும், இராணுவ தளபாடக் கொள்வனவுகளும் தொடர்ந்தும் மீண்டும் எம்மீது தாங்கள் போரைத் தொடுப்பதற்கான தயார்ப்படுத்தல்களில் செயற்படுவதாகவே கருதமுடிகிறது.

இவ்வாறான சூழலைப் புறம்தள்ளி தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில் நிம்மதியான - சுதந்திரமான - அச்சமற்ற வாழ்க்கையை வாழக் கீழ்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு உதவும் பட்சத்திலேயே தங்களை நாம் நம்பும் நிலை தோன்றும்.

★ இடம்பெயர்ந்து பல்லாண்டு அவல வாழ்வு வாழும் மக்களின் துயர் போக்க உடன் பாதுகாப்பு வலயத்தை அகற்றல்.

★ கட்டுப்பாடற்ற நிலையில் கடற்றொழில் செய்ய அனுமதி அளித்தல்.

★ உயர் கல்வி நிலையத்தில் உயர் பாதுகாப்பை அகற்றி மாணவர் அச்சமற்ற கற்றலுக்கு வசதி செய்தல்.

★ தமிழ் மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மதித்து மக்கள் குடியிருப்பின் அருகில் உள்ள படை நிலைகளை அகற்றல்.

எமது மனித உணர்வுகளை மதித்து மேற்குறித்தவற்றை நடைமுறைப்படுத்த தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடைக்காலத் தன்னாட்சி அரசு தொடர்பாகப் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் - என்றுள்ளது.

(8-70-173)

## கண்ணாடிப்பிட்டி மயானத்தை புனரமைக்க நடவடிக்கை

தென்மராட்சி,மார்ச்30

சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தினைப் புனரமைப்பதற்கான நடவடிக்கையினை நகரசபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

யுதத அனர்த்தங்களின்போது சேதமடைந்த மயான மண்டபம், எல்லைச் சுவர்கள், கிணறு ஆகியன புனரமைக்கப்படவுள்ளன.

தற்போது பொதுமக்கள் பயன்படுத்தும் தகனக்கிரியை செய்யும் மேடை தவிர்ந்த ஏனைய பகுதிகள் துப்புரவுசெய்யப்படவுள்ளன.

மயான எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மிதிவெடி அபாயம் காணப்படுவதால் அப்பகுதியினை வெடிபொருள்கள் அகற்றும் பிரிவினர் மூலம் துப்புரவு செய்யத் தென்மராட்சிப் பிரதேச செயலர் ஊடாக யாழ். அரச அதிபருக்கும் மயான எல்லைக்குட்பட்ட பகுதியிலுள்ள படையினரின் காவலரண்களை அப்புறப்படுத்தக் கோரி பலாலி படைத் தலைமையகத்திற்கும் நகரசபையினால் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளன.

இந்த மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும் இடத்தில் இரு கொட்டகைகள் அமைகக்கவும் நான்கு இடங்களில் தகனஞ்செய்வதற்குரிய இரும்புக் கம்பிகள் நடவும் நகரசபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.(8-117)

## இளைஞர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்,மார்ச்30

அச்சுவேலி, பாரதி வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவரை வேறொருவர் வழிமறித்துத் தாக்கியதில் பலத்த காயமடைந்து மயங்கிய நிலையில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

திங்களன்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம் பவத்தில் அச்சுவேலி, பத்தைமேனியைச் சேர்ந்த சரவணமுத்து ரவிச்சந்திரன் (வயது - 22) என்பவரே படுகாயமடைந்தவராவார். (8-12)

## சிறுதானியச் செய்கை பாதிப்படையும் அபாயம்!

வட்டுக்கோட்டை,மார்ச்30

மழை இன்மையால் வலி.மேற்குப் பகுதியின் பல இடங்களில் சிறுதானியச் செய்கை பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றது.

வட்டுக்கோட்டை, அராலி, சங்கரத்தை, அரசடி, கோட்டைக்காடு போன்ற வயல் நிலங்களில் செய்கை பண்ணப்பட்ட எள்ளு, பயறு, உழுந்து போன்ற பயிர்களே பாதிப்படைந்துள்ளன. ஓரிரு வாரங்களில் மழை கிடைக்காது போனால் முழுமையான பாதிப்பு ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.(ஓ-161)

## விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தால் கடந்த வாரம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களின் பெயர் விவரங்கள் வெளியாகியுள்ளன.

முதல் ஐந்து இடங்களைப் பெறும் மாணவர்களின் காட்சிப்பொருள், பாடசாலை விவரம் என்பன வருமாறு:-

முதலாம் இடம் - PECHO இயந்திரம் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன், இரண்டாம் இடம் - இயற்கையின் கோரத்தாண்டவம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி, மூன்றாம் இடம் - வாழ்க்கைக்கு நீர் - வேம்படி மகளிர் கல்லூரி, நான்காம் இடம் - யாழ்ப்பாணத்தில் நானும் நீரும் - யாழ். இந்துக் கல்லூரி, ஐந்தாம் இடம் - உள்ளகத் தொலைபேசி - யாழ். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன்.

சிறப்புப் பரிசில் பெறும் காட்சிப்பொருள், பாடசாலை விவரம் என்பன வருமாறு:-

சேது சமுத்திரத்திட்டம் - கொக்குவில் இந்துக் கல்லூரி, DNA Finger print - கொக்குவல் இந்துக் கல்லூரி, Power guard - விக்னேஸ்வராக் கல்லூரி, பிரச்சினை நீர், தீர்வு மழை நீர் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, Auto Water Level Control - ஹாட்லிக் கல்லூரி.

இவர்களுக்கான பரிசில்கள் விரைவில் நடைபெறவுள்ள யாழ். விஞ்ஞானச் சங்கத்தின் வருடாந்த அமர்வில் வைத்து வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-12)

## தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு 'கார்ப்' திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையை 'நிக்கொட்' திட்ட முகாமைத்துவப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் 'கார்ப்' திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்ய நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட 'நிக்கொட்' திட்ட அதிகாரி தெரிவித்தார்.

இத்திட்டத்திற்கென 30 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர் விடுதி, தாதியர் விடுதி, சிற்றூழியர் விடுதி, நோயாளர் விடுதி, சமையலறை, மருந்துக் களஞ்சியம் என்பன புனரமைக்கப்படவுள்ளன.

இதேவேளை, வடமராட்சி அம்பன் வைத்தியசாலை மீள் புனர்நிர்மாணம் செய்வதற்கான வேலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பணிகள் அனைத்தும் அடுத்த வாரமளவில் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(8-12)





யாழ். மாவட்ட றோட்டறக்ட் கழகங்கள், கொழும்பு ஐ.டி.எம்., கொழும்பு நகர் மைய றோட்டறக்ட் கழகங்கள் ஆகியன இணைந்து கோப்பாயில் அமைத்த றோட்டறக்ட் தையல் பயிற்சி நிலையத்தைக் கோப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் அலுவலர் திறந்துவைத்தார். கொழும்பு ஐ.டி.எம். றோட்டறக்ட் கழகத் தலைவர் றோட்டறக்ட் அனோஜன் நிற்கிறார். தையற் பயிற்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படுவதை அடுத்த படத்தில் காணலாம். (ப-203)

## மாவிலைத் தத்திகளைக் கட்டுப்படுத்த இரசாயன மருந்தினை விசிறுங்கள்

### கீரிமலை கமநல அதிகாரி அறிவுறுத்து

வலி.தென்மேற்கு,மார்ச்30

மாமரங்கள் பூக்கும் காலத்திலும், குண்டுமணி போன்ற பிஞ்சுகள் உருவாகும் காலத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் மாவிலைத் தத்தப் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கு தெளிகருவி மூலம் இரசாயன மருந்து விசிறப்பட வேண்டும் என்று கீரிமலை கமநல சேவை நிலையப் பிரிவு விவசாயப் போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

மாகியப்பிட்டியில் இயங்கிவரும் கீரிமலை கமநல சேவை நிலையத்தில் இதற்குப் பயன்படுத்தப்படும் தெளிகருவி உள்ளதெனவும் -

தேவைப்படுபவர்கள் அதனை இரவலாகப் பெற்று இரசாயன மருந்தைத் தமது மாமரங்களுக்கு விசிற முடியும் என்றும் - அவர் தெரிவித்தார்.

தற்போது மாவிலைத் தத்திப் பூச்சிகள் மாமரத் துளிர்களையும், பூக்களையும் தாக்கும் காலமாகையால் இரசாயன மருந்தை விசிறுவதன் மூலம் இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-135)

எந்திரவியல் கல்லூரி மூலம்

## இழைப்படகு திருத்தும் திட்டம் யாழ். மாவட்டத்தில் ஆரம்பம்

குருநகர்,மார்ச்30

கண்ணாடி நார் இழைப்படகுகளைத் திருத்தும் செயற்றிட்டம் யாழ். மாவட்டத்தில் யாழ். கடலக எந்திரவியல் கல்லூரிமூலம் செயற்படுத்தப்பட்டு வருவதாக யாழ். கடலக எந்திரவியல் கல்லூரி அதிபர் இ.செபஸ்ரியாம்பிள்ளை தெரிவித்தார்.

படகுகள் திருத்தியமைக்கும் இந்தச் செயற்றிட்டம் யாழ். மாவட்டத்தில் முதன்முதலாவது தற்போது காரைநகர் அம்பாள் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாரிசன்கூடல், சேந்தான்குளம், வடமராட்சி ஆகிய பகுதிகளிலும் இச்செயற்றிட்டம் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்குரிய உதவிகள் மற்றும் உபகரணங்கள கொழும்பில் இயங்கிவரும் 'சீநோர்' தலைமையகத்தால் வழங்கப்படுகிறது.

இதுதொடர்பான மேலதிகத் தகவல்களுக்கு யாழ். கடலக எந்திரவியல் கல்லூரியுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ். கடற்றொழில் சங்கங்களை அதிபர் கோரியுள்ளார்.

(ஒ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது!
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
ரோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY :
ROYAL Industries Colombo 12
☎ : 0112334603
அனைத்துப் பாமசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →
(C/36310)




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

# தந்தை செல்வா பிறந்த தின வழிபாடு

யாழ்ப்பாணம்,மார்ச்30

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 107 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நன்றி செலுத்தும் வழிபாடு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சுண்டுக்குளி சென். ஜோன்ஸ் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வழிபாட்டில் நாவாந்துறைப் பங்குத் தந்தை அருட்தந்தை எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் செய்தி வழங்குவார். (8-202)

# கதிரவேற்பிள்ளை குருபூசைத் தினத்தை முன்னிட்டுக் கட்டுரைப் போட்டி

சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் சதாவதானி கதிரவேற்பிள்ளையின் குருபூசைத் தினத்தை முன்னிட்டு அடுத்த மாதத்தில் கட்டுரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

'நாவலர் வழிவந்த கதிரவேற்பிள்ளை', 'ஈழத்துப் புலமையின் ஆழத்தை உலகறியச் செய்த சதாவதானி நா.கதிரவேற்பிள்ளை', 'சதாவதானி என்றும் நினைவில் நிற்பவர்' என்னும் தலைப்புகளிலேயே இப்போட்டி நடத்தப்படவுள்ளது. இப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 7ஆம் திகதிக்கு முன்னர் 'செயலாளர், சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையம், பருத்தித்துறை' என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (8-202)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 - 02 - 1953



உதிர்வு 12 - 04 - 2001

**திருமதி இந்திரசேனா கனகநாயகம்**
(இந்திரா அக்கா)
திதி: 30-03-2005

நான்கு ஆண்டுகள் சென்றாலும் – உங்கள் நினைவலைகள் நிழலாக என்றும் தொடர்கின்றன.

தகவல்:
திரு.வி.கனகநாயகம் (கணவர்),
துரைமலர் பொய்கை,
செட்டிவளவு லேன்,
இணுவில் மேற்கு, இணுவில்.

கணவர்,
சகோதரர்கள், சகோதரிகள்,
மைத்துனர்கள், மைத்துனிமார்,
பெறாமக்கள், மருமக்கள்.

தொலைபேசி எண்கள்:
T.P.NO: 021 222 3715
021 4591 245
Idd- 0094 21 222 3715
0094 21 459 1245

(42959) (39-14-32-26)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்30

வடபிராந்திய யாழ்.ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் விசேட பொதுச்சபைக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணத்தில் (வெஸ்கோ மருந்தகத்துக்கு அருகில்) நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் முதல் மருந்தகங்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினையை ஆராயும் இக்கூட்டத்தில் சகல மருந்தக உரிமையாளர்களையும் கலந்துகொள்ளுமாறு மன்றத் தலைவர் லயன் டாக்டர் க.ராஜரெத்தினம் கேட்டுள்ளார். (8-202)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 02 - 1934



உதிர்வு 31 - 03 - 2005

**ஞானப்பிரகாசம் சிங்கராஜா**
(மரதன்கடவல ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

ஓராண்டு மட்டுல்ல பல ஆண்டுகள் கரைந்தாலும்
நினைவுகள் மட்டும் அழியாச் சுடராய் ஒளி வீசும்!

இல:637, வள்ளுவர் புரம்,
விசுவமடு (வன்னி).
(43449) (39-14-32-26)

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சகோதரர்கள்:
(க.ஞானம்மா, அ.நேசம்மா, இராசசிங்கம்)

# சட்டவிரோத மணல் அகழ்வைத் தடுக்க குழுக்கள் அமைப்பு

தென்மராட்சி,மார்ச்30

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்த கிராமங்கள் தோறும் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

கிராமங்களில் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊர்ப் பிரமுகர்கள் ஆகியோர் அடங்கிய குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு இக்குழுவின் பொலீஸாரின் உதவியுடன் மணல் அகழ்வதைக் கட்டுப்படுத்தும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் திகதி தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெற்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பான கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் பிரதேசத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள் சூழல் பாதுகாப்பு அலுவலர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (8-117)

# பாம்பு கடித்து சிப்பாய் மரணம்

தென்மராட்சி,மார்ச்30

கிளாலி கடற்படை முகாமில் பாம்பு கடித்து கடற்படைச் சிப்பாய் பலியானார்.

கடந்த 25ஆம் திகதி இரவு பாம்பினால் கடியுண்ட சிப்பாய் பலாலி படையினரின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாரம்பல, நக்க காவத்தையைச் சேர்நத டபிள்யு. ஆர்.ஏ. ரோகண என்னும் சிப்பாயே மரணமானவராவார்.

மரணம் தொடர்பாகக் கொடிகாமம் பொலீஸார் நீதிமன்ற அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து சாவகச்சேரி பதில் நீதிவான் சு.கந்தசாமி விசாரணை நடத்தி பாம்பு கடித்ததால் மரணம் சமபவித்ததாக நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். (8-117)

## "மொறிஸ் செருலோ" ஊழியங்கள் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில்

"மொறிஸ் செருலோ" ஊழியங்களின்
விமலா எல்லாளசிங்கமும், டில்கானும்
இணைந்து
நடத்தும் விசுவாசிகளுக்கான விசேட கருத்தரங்கு

இடம்:
அசெம்பிலி ஒப் கோட், 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

காலம்:
02-04-2005 சனிக்கிழமை காலை 8.30 - 1.30 மணிவரை
03-04-2005 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிமுதல்....

நீங்களும் பங்குகொண்டு
தெய்வீக ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**பிரவேசம் இலவசம்**
(தயவுசெய்து தனிப்பட்ட அழைப்புகளை எதிர்பார்க்காதீர்கள்)

போதகர்,
அசெம்பிலி ஒப் கோட், யாழ்ப்பாணம். (சி-41813) (32-14-26-24)

## புதுவருட சிறப்புத் தள்ளுபடி விற்பனை!!!

செய்மதி தொலைக்காட்சித்துறை இலங்கையில் ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களை வென்று எடுத்துள்ள Sats - Tech நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்குப் புத்தாண்டுச் சிறப்பு விலையில் செய்மதித் தொலைக்காட்சி உபகரணங்களை வழங்கி வருகின்றது.

'Ku' band DISH சிஸ்டம் Rs * 12500 /= மட்டுமே
8' C' band DISH சிஸ்டம் Rs * 19999 /= மட்டுமே
8' C' band &Ku band சிஸ்டம் Rs * 22000 /= மட்டுமே

★ மற்றும் அனைத்துக் கேபிள் TV இற்குரிய உபகரணங்களும் மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
★ ஒரு வருட உத்தரவாதம்
★ விற்பனைக்குப் பிந்திய சேவை
★ Free Channel up dating
★ Free Software up dating
★ இலவசத் தொழில்நுட்ப ஆலோசனைகள்
★ தெளிவான காட்சி
★ துல்லியமான ஒலி

சித்திரை 14வரை அல்லது கையிருப்பு முடியும் வரை மட்டுமே!

**SATS - TECH ENGINEER'S**
(National Video Center)
182, K.K.S. Road, Kokuvil
(Near Kulapitty Church) , Jaffna.
Phone: (021)222 5908, 0777 710785.
(சி41069)(38-14-32-26)

இப்பொழுது இலங்கையில்



சாரங்கள்
பெனியன்கள்
உள்ளாடைகள்
கைக்குட்டைகள்
Lungies (Sarongs)
Vests
Briefs
Kerchiefs
Direct Importers Wholesalers & Retailers
SOLE DISTRIBUTORS
OCEANICK IMPEX
192, Main Street, Colombo-11.
Tel: 2336720, 2327168 Wholesale: 2384131
Fax: 2326961 E-mail: oceanick192@yahoo.com

## ஈழவாணியின் சுய தொழில் வாய்ப்புக்கான வேலைத்திட்டம்

யாழ்.மாவட்டத்தின் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலிருந்து சுய விற்பனைப் பிரதிநிதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ விண்ணப்பதாரிகள் சுய விவரக்கோவையுடன் கிராம சேவையாளர் பிரிவு, உதவி அரச அதிபர் பிரிவு உள்ளடங்களாக, சொந்தக் கையெழுத்தில் ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (வயது 20 தொடக்கம் 35 வரை).
★ கல்வித் தகைமை அவசியமில்லை. மாதாந்தம் உங்கள் முயற்சியால் 7500 ரூபாவுக்கு மேல் வேதனம் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு.
★ முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது எதிர்வரும் 05-04-2005 வரை.
★ விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி.

நிர்வாக இயக்குநர்,
ஈழவாணி சுயதொழில் நிறுவனம்,
இல.111, [illegible] வீதி, யாழ்ப்பாணம்.
விளம்பர இணைப்பாளர் [illegible]

(43614)(39-14-32-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு வலயத்தில் உள்ள துண்டி மயானத்தை புனரமைப்பதற்கு வாய்ப்புக்கிட்டுமா?

செய்திக்கட்டுரை

கடந்த கால போர் அனர்த்தங்களின்போது சேதமடைந்தும் பராமரிப்பின்றியும் கைவிடப் பட்டு இருந்த கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தைப் புனரமைப்பதற்கு இதுவரை எந்த முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட வில்லை.

அதியுயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் இருக்கும் இந்த மயானம் 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்வுக்கு முன்னர் சகல வசதிகளுட னும் காணப்பட்டது.

மக்கள் தங்கும் மடம், கிணறு, சுற்றுமதில்கள், மரநிழல்கள் போன்றவை எல்லாம் போரினால் அழிந்து தற்போது மக்கள் நடமாட்டம் இன்றி பாலைவனம் போன்று மயானம் காணப் படுகின்றது.

கிட்டத்தட்ட 3,500 குடும்பங்கள் தங்கள் அந்திமக் கடமைகளை இந்த மயானத்திலேயே நிறைவேற்றி வருகின்றன என்று தெரிவிக்கப் படுகின்றது.

கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு, சுண்டுக்குளி, ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இந்த மயானத்தையே தகனக்கிரியைகளுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது இந்த மயானத்திற்கு சடலங்களைக் கொண்டு செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மயானம் இராணுவத்தின் அதிஉயர் பாதுகாப்பு பிரதேசத்தில் அமைந்திருப்பதால் சடலங்களை தகனம் செய்வதற்கு இராணுவத்தின் முன் அனுமதி பெற்றுச் செல்லவேண்டும். அத்துடன், மயானத்தில் எதுவித அடிப்படை வசதிகளும் செய்யப்படாததினால் அங்கு செல்வோர் சிரமப்பட்டு வருகின்றனர்.

மயானத்தை அபிவிருத்தி செய்வதற்காக புதிய நிர்வாக சபை ஒன்றும் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த நிர்வாக சபையின் போஷகராக யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவுசெய்யப்பட்டு 11 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது.

இந்த நிர்வாகசபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டு, தற்போது ஒருவருடம் பூர்த்தியாகின்றது. எனினும், எவ்வித மயான அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப் படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

மயானத்தின் அபிவிருத்தி மற்றும் புனரமைப்புக்களை மேற்கொண்டு தருமாறு இந்த நிர்வாக சபை பலதடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டும் எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வில்லை என்று சபையின் உறுப்பினர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

இராணுவம் ஆக்கிரமித்திருக்கும் இப்பிரதேசத்தில் இருந்து இராணுவம் வெளியேறினால் இந்த மயானத்தை முன்பிருந்தது போல் புனரமைப்பதற்கு வசதியாக இருக்கும். அத்துடன் மயானப்பகுதியை சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதற்கும் இராணுவத்தினர் அனுமதி வழங்க மறுத்துவிட்டதாக நிர்வாக உறுப்பினர் தெரிவித்தார்.

சிவயோக சுவாமிகள் நடமாடிய இந்த புண்ணிய பூமியில், யோகர் சுவாமிகள் சமாதி அடைந்த உடலைத் தகனம் செய்த பெருமை பெற்ற இந்தத் துண்டி மயானத்தை பழைய நிலைக்கு புனரமைத்து மக்கள் சிரமம் இன்றிச் சடலங்களை கொண்டு சென்று தகனம் செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு கொடுப்பது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமையாகும்.

**போராட்டம் நடத்த முஸ்தீபு**


தற்போதைய சமாதான காலப்பகுதியிலும் இந்தப் பிரதேசத்தை அதியுயர் பாதுகாப்புப் பிரதேசம் என்று கூறிக்கொண்டு இராணுவம் தொடர்ந்து ஆக்கிரமித்துக்கொண்டிருந்தால் அவர்களுக்கு எதிராக வெகுஜனப் போராட்டங்களை நடத்துவதற்கு நாம் பின்னிற்க மாட்டோம் என்று மேற்படி மயானத்தின் நிர்வாகக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் சுதந்திரமாக மயானத்திற்குச் சென்றுவரவும் இப்பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தவும் பூஜை வழிபாடுகள் இன்றி இருக்கும் துண்டி ஐயனார் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை நடத்தவும் இராணுவத்தினர் அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**பா.நந்தகுமார்**
**அரியாலைச் செய்தியாளர்**

இவற்றிற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாத பட்சத்தில் வெகுஜனப் போராட்டங்களை நடத்துவதற்கு முழு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

★





அராலி - வட்டுக்கோட்டை சமுர்த்தி வங்கியின் புதிய கட்டடத் திறப்புவிழா கடந்த புதனன்று நடைபெற்றது. திறக்கப்பட்ட புதிய கட்டடத்தை மேலே உள்ள படத்தில் காண்க. திறப்புவிழாவை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்ராஸ் நிற்பதையும் - யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் தி. மகேஸ்வரகுமார் நடுகைக் கல்லைத் திரை நீக்கம் செய்துவைப்பதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம். *(படங்கள்: வலி. மேற்குச் செய்தியாளர்)*

# வாசகர் திருமுகம்

## மனிதாபிமானத்தின் பேரில் வேண்டுகின்றோம்

வினைத்திறன் அற்ற இலங்கை அரச நிர்வாக இயந்திரத்தின் இயக்கம் காரணமாக அவசர நிவாரணப் பணிகள் கூட உடனடியாக மக்களை எட்ட முடியாத நிலை காணப்படுகின்றமை இன்று உலகறிந்த விடயம். இந்த நிர்வாக இயந்திரத்தின் அக்கறையற்ற போக்கினால் பல மனித உரிமைகள் மீறப்படும் நிகழ்வுகள் பலரும் அறியாத விடயம். இதே அரசசேவையில் தம்மை அர்ப்பணித்துச் சேவை செய்து இன்று தள்ளாத வயதில் ஓய்வூதியம் பெறும் ஒரு தொகுதி ஓய்வூதியர்களின் பரிதாப நிலையை இப்பகுதியினூடாக எடுத்துக் கூறுவதன் ஊடாகவேனும் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இவ்விடயத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

அண்மையில் ஓய்வூதியர்களுக்கு நீண்ட காலத்தின் பின்னர் ஓய்வூதிய மீளாய்வு செய்யப்பட்டு ஓய்வூதியம் மாற்றியமைக்கப்பட்டது. பயிற்சிபெற்ற ஆசிரியர்களுக்கு (Trained Teachers)இந்த ஓய்வூதிய மாற்றத்திற்கு அவர்களது பயிற்சிச் சான்றிதழ் (Training College Certificate) கோரப்பட்டது. ஆனால், 50 வருடங்களுக்கு முன்பெற்ற சான்றிதழை பல வயோதிப ஆசியர்களும் எமது தேசத்தில் அடுத்தடுத்து இடம்பெற்ற இன்னல்களின் போது இழந்துவிட்டார்கள். இந்நிலையில் பிரதேச செயலகங்களை இவர்கள் அணுகியபோது அவர்கள் சேவை செய்த திணைக்களங்களில் அதன் பிரதியைப் பெற்றுத்தரும்படி அறிவுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் யாழ்.கல்வித் திணைக்களத்தின் பதிவுகள் அறைக்குச் (Record Room) சென்று சுயவிவரக் கோவைகளைப் பலத்த தூசிகளின் மத்தியிலும் சிரமத்தின் மத்தியிலும் தேடி எடுத்த போது அவற்றுள் அப் பிரதிகள் காணப்படவில்லை. பதிலாக வேறு சில ஆவணங்களின் பிரதிகள் கொடுக்கப்பட்டன. அவற்றைப் பிரதேச செயலகங்களில் ஒப்படைத்த போதும் பயிற்சிச் சான்றிதழ் இன்றி உடனடியாக அதனை வழங்க முடியாது எனவும் அதற்கு மாற்று நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவும் பதிலளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற ஆசிரியர் என்பதற்கு ஆதாரமாக அச்சான்றிதழ் தேவைப்படுகின்றது எனக் கூறப்படுகின்றது. அவ்வாறாயின் இதுவரை காலமும் எதன் அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்பட்டது என்பது புரியாத புதிராக உள்ளது.

இது தொடர்பாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலகக் கணக்காளர் பதிலளிக்கும் போது இதற்காகக் குழு ஒன்றை ஒழுங்கமைத்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிச் செய்யமுடியும் எனவும் இதற்காகத் தான் வடமராட்சிக் கல்வி வலயத்தில் இருந்து ஒருவரை இக்குழுவிற்குத் தரும்படி கேட்டிருந்ததாகவும் ஆனால், அவர்கள் அதுவிடயத்தில் அக்கறை காட்டாமையால் வேறு திணைக்களங்களில் இருந்து பொருத்தமானவர்களைக் கேட்கப் போவதாகவும் கூறியுள்ளார். இச் செயற்கிரமம் நடந்து முடிந்து புதிய ஓய்வூதியமும் நிலுவையும் ஓய்வூதியர்களது கைகளுக்குக் கிடைக்கு முன்னர் பல ஓய்வூதியர்கள் மரணமடைந்து விடக்கூடிய பரிதாப நிலையே காணப்படுகின்றது. எனவே, இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சமூகத்தின் மீது அக்கறைகொண்ட அமைப்புக்களும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் உடனடியாகக் கவனம்செலுத்தி இம் மூத்த தலைமுறைக்குத் தமது நன்றிக் கடனைச் செலுத்துவார்களா?

*பொலிகண்டி.*

பாதிக்கப்பட்ட ஓய்வூதியர்கள் சார்பில்,
**தி.சுபாகரன்,**

## ஆங்கில பாடப் பெறுபேறு ஆசிரியர் தெரிவில் முறைகேடு

வடக்கு - கிழககு மாகாண ஆசிரியர் சேவை (வகுப்பு 3 தரம் II) போட்டிப் பரீட்சை கடந்த ஆண்டு நடத்தப்பட்டது. வர்த்தமானி அறிவித்தலின் படி ஆங்கில பாடத்திற்கு உயர்தரப் பரீட்சையில் சித்தியடைதலும் மற்றும் சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு சாதாரணசித்தியும் அமைந்திருந்தது. இதற்கு அமைய போட்டிப் பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்று திருகோணமலைக்கு நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டேன். ஆனால் ஆசிரியர் தெரிவில் எனது பெயர் இடம்பெறவில்லை. அவர்கள் சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தற்கு D, A.தகைமைகளை பெற்றவர்களுக்கு மட்டுமே ஆசிரியர்நியமனம் வழங்கப் பட்டுளளது.

இதனால் C,B தகைமைகளை பெற்று அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். தயவுசெய்து இதைக்கருத்தில் கொண்டு இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் உடன நடவடிக்கை எடுக்குமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

*கொக்குவில்.*

**பாதிக்கப்பட்ட மாணவர் சார்பில்**

## சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் ஜனாதிபதியின் திட்டத்துக்கு தமிழ்க் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் கடும் எதிர்ப்பு

கொழும்பு,மார்ச்30

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழித்தல் மற்றும் அதிகாரப் பரவலாக்கம் என்பன தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதை தமிழ் மக்கள் புறக்கணிப்பார்கள் என்று தமிழ்த தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

அதேபோன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இந்த சர்வஜன வாக்கெடுப்பை நிராகரித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் கூறியுள்ளதாவது:-

ஜனாதிபதி சந்திரிகா நடத்தும் இந்த வாக்கெடுப்பில் வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் பங்கேற்கமாட்டார்கள். இந்த வாக்கெடுப்பானது அரசியல் விளையாட்டு வேலை. அரசியல் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளுகிற நடவடிக்கை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வை உருவாக்காத வரை தமிழ் மக்கள் இதுபோன்ற எந்த ஒரு சர்வஜன வாக்கெடுப்பிலும் பங்கேற்க மாட்டார்கள்.

20 ஆண்டுகால யுத்தத்தாலும், கடந்த டிசெம்பர் 26 நடைபெற்ற ஆழிப்பேரலையாலும் பெரும பாதிப்புகளுக்குள்ளாகி சுமைகளோடு வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்காத நிலையில் அவர்களால் எப்படி வாக்கெடுப்பில் பங் கேற்கமுடியும்?

ஆழிப்பேரலை மீள் கட்டமைப்புக்கு உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமல் வாக்கெடுப்புக்கு பெருந்தொகைப் பணத்தை செலவிடுவது வீண் விரயமே! 1994 ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி அதிகாரம் குறித்து மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள். மீண்டும் எதற்காக இன்னொரு வாக்கெடுப்பு?

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் விவாதிக்காமல் இதுபோன்ற வாக்கெடுப்புகளை நடத்துவது அர்த்தமற்றது - என்றார் அவர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இது குறித்துக் கூறியதாவது:-

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணாத நிலையில் வாக்கெடுப்பு நடத்துவது என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் முற்றிலும் அர்த்தமற்றது.

அத்துடன், அரசானது மக்கள் முன்வைக்கவுள்ள, வாக்கெடுப்பு தொடர்பான விடயங்களும் தெளிவானதாக இல்லை - என்று அவர் கூறியுள்ளார்.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலர் ஹசன் அலி இது குறித்துக் கூறியுள்ளதாவது:-

இந்த அரசு கூறுகின்ற சர்வஜன வாக்கெடுப்புக் குறித்து முஸ்லிம் மக்கள் மத்தியல் ஒருவித குழப்பமான நிலையே நீடிக்கிறது. அரசியல் விளையாட்டுகளில் இதுவும் ஒன்றே என நான் கருதுகிறேன். இதை நாங்கள் ஏற்க முடியாது.

நிறைவேற்று அதிகார முறை ரத்து மற்றும் சமஷ்டி உள்ளிட்ட எதுவானாலும் மக்களுக்கு உரிய விளக்கத்தை அரசு அளிக்காதவரை அதை ஏற்க் இயலாது.

இந்த வாக்கெடுப்பு குறித்து ஜனாதிபதி மீள்பரிசீலனை செய்வதோடு, தீவகத்தின் இனச் சிக்கலுக்கு உரிய தீர்வு காணுவதில் அக்கறை செலுத்த வேண்டும் - என்றார்.

(க-ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்வர்ணதாத்ரி புங்குடுதீவு, கண்ணகைபுரம்

# அருள்மிகு கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்



புனராவர்த்தனப் பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

**காலம்: பங்குனித் திங்கள் 17 (30.03.2005) புதன் காலை 9.15 மணிமுதல் 10.45 மணிவரை**

**சிவதர்மச் செல்வர்களே!**

சிவபூமியாகிய இலங்கையின் வடபால் சைவ கலாசாரம் பொலிவுறும் யாழ்ப்பாண நகரின் தென்பால் சிவ சீலர்களும், தர்மசிந்தை குறையாத வளமும் உடைய வணிகப் பேராளர்களும்,கல்வியும்,இசைக்கலையும் கைவரப்பெற்ற பேரறிஞர்களும் நிறைந்த ஸ்வர்ணதாத்ரி துவீபம் புங்குடுதீவு கிழக்கில் அருள்விளங்கு கண்ணகைதேவி எனப் போற்றப்படும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய தர்மசீலர்களும்,அடியார்களும் திருவருளுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அழகுற வர்ண வேலைகள் செய்து மங்கள மிகு தாரண வருடம் பங்குனி மாதம் 17 ஆம் நாள் (30-03-2005) புதன்கிழமை பஞ்சமித் திதியும், அனுஷ நட்சத்திரமும்,அமிர்த சித்தயோகமும், குரு ஓரையும் அமையும் காலை 09.15 மணிமுதல் 10.45 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நிகழ்த்தத் திருவருள் பாலித்துள்ளதால் அந்நேரமும் அதற்கு முன்பின் நடைபெறும் கிரியாகாலங்களிலும் வந்து கலந்து தரிசித்துய்யுமாறு வேண்டுகிறோம்.

## கிரியாகால விவரங்கள்:

| | | |
|---|---|---|
| பங்குனி 12 (25.03.2005) வெள்ளி மாலை 4.00 மணிமுதல் | - | விநாயக வழிபாடு, அனுக்ஞை, கணபதி ஹோமம், யந்திரபூஜை. |
| பங்குனி 13 (26.03.2005) சனி மாலை 5.00 மணிமுதல் | - | கிரகசாந்தி, பிரவேச பலி, திசா ஹோமம் |
| பங்குனி 14 (27.03.2005) ஞாயிறு காலை 9.00 மணிமுதல் | - | நவக்கிரஹஹோமம், யந்திரபூஜை |
| பங்குனி 14 (27.03.2005) ஞாயிறு மாலை 4.00 மணிமுதல் | - | வாஸ்து சாந்தி, கோவாசம் |
| பங்குனி 15 (28.03.2005) திங்கள் காலை 9.30 மணிமுதல் | - | சிற்பி சம்பாவனை, தூபிஸ்தாபனம், சூரியாக்கினி, தீர்த்த, மிருத்.சங்கிரகணம் |
| பங்குனி 15 (28.03.2005) திங்கள் மாலை 5.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, தீபஸ்தாபனம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், கலாகர்ஷனம், யாகபூஜை, ஹோமம், சர்வாஞ்சலி,யந்திரஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் |
| பங்குனி 16 (29.03.2005) செவ்வாய் காலை 7.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, தைலாப்பியங்கம், யாகபூஜை, விசேட திரவியஹோமம், ஸ்ரீ சுத்த ஹோமம், சர்வாஞ்சலி |

**அடியார்கள் காலை 7.00 மணிமுதல் மாலை 8.00மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்தலாம்**

| | | |
|---|---|---|
| பங்குனி 16 (29.03.2005) செவ்வாய் மாலை 5.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, யாகபூஜை, ஹோமம், நியாசம், ஸ்பர்சாகுதி, தீபாராதனை, சர்வாஞ்சலி |
| பங்குனி 17 (30.03.2005) புதன் காலை 6.00 மணிமுதல் | - | பஞ்சசுத்தி, யாகபூஜை, ஹோமம், மகாபூர்ணாகுதி, பலிகள், தானங்கள்,கும்பப்பிரதஷணம், கோபுர கும்பாபிஷேகம் (9.15 மணி) பிரிதிகள். மஹா கும்பாபிஷேகம் (10.00 மணி) கண்ணகைதேவி, பரிவார மூர்த்திகள் கும்பாபிஷேகம், தசமங்கள தரிசனம், எசமானபிஷேகம், ஆசீர்வாதம், ஆசியுரை |
| பங்குனி 17 (30.03.2005) புதன் நண்பகல் 11.30 மணிக்கு | - | மஹாபிஷேகம் பூஜை, மாகேஸ்வர பூஜை |
| பங்குனி 17 (30.03.2005) புதன் மாலை 6.00 மணிக்கு | - | விசேட பூஜை, தீபாராதனை, சுவாமி வீதியுலா |

# விளம்பர அனுசரணை:

**யாழ்ப்பாண வணிக நிலையம்**
ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே. இல. 2227480.

**யாழ்ப்பாண இரும்பகம்-ஏசியன் வயின்ற்ஸ்**
**யாழ்.விநியோக நிலையம்**
32,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 2227028, 2225589.

# வூட்லண்ஸ் கொம்பனி

192, 4 ஆம் குறுக்குத்தெரு, கொழும்பு - 11. T.P:422 426, 327451.

(C/41871)(52-11-14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வனவிலங்கு, பறவைகள் சரணாலயம் கிளிநொச்சியில் அமைக்கத் திட்டம்

பரந்தன், மார்ச்30

கிளிநொச்சி மாவட்டத்தில் வனவிலங்குகள் மற்றும் பறவைகள் சரணலாயம் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட மதிப்பீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதுதொடர்பாக பேராதனைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் சாள்ஸ் சந்தியாப்பிள்ளை தலைமையிலான குழுவினர் சுண்டிக்குளம் பகுதியில் கடந்த வாரம் ஆய்வுசெய்தனர்.

இக்குழுவில் டென்மார்க் நாட்டு விவசாயப் பல்கலைக்கழகத் துணைப் பேராசிரியர் ந.சிறீஸ்கந்தராசா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக விரிவுரையாளர் ச.விஜயமோகன் ஆகியோரும் இடம்பெற்றிருந்தனர்.

இதுதொடர்பாக அவர்கள் கூறியதாவது:-

இலங்கையில் இயற்கை அம்சங்கள் சுண்டிக்குளம் பகுதியிலும் நிறைந்துள்ளன. இப்பிரதேசம் வனவிலங்கு மற்றும் பறவைகள் சரணாலயம் அமைக்க சிறப்பான இடமாக அமைந்துள்ளது. இப்பகுதியில் சரணாலயம் அமைப்பதன் மூலம் அரியவகை வனவிலங்குகள் மற்றும் பறவைகளைப் பாதுகாக்க முடியும் அத்துடன், இயற்கையான வன வளத்தையும் பேணமுடியும்.

இதன்மூலம் எமது சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். அத்துடன், இங்கு சுற்றுலா விடுதிகளை அமைப்பதன் மூலம் உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக இப்பகுதியை மாற்ற வாய்ப்புண்டு. அத்தகைய சூழ்நிலையில் இப்பகுதி மக்களுக்கு வருமான வாய்ப்புகள் அதிகரிக்கும் என்று அக்குழுவினர் கருத்துவெளியிட்டனர். (ஒ-352)

## மாணவர்களுக்கு உதவி

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் திருநகர் சுரபி முன்பள்ளி மாணவருக்கு தலா இருநூற்று ஐம்பது ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு கடந்த 19 ஆம் திகதி திருநகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் பா.சிவபாலன் தலைமையில் நடைபெற்றது. 45 மாணவருக்குக் கற்றல் உபகரணங்களும் கணவனை இழந்த 146 பெண்களுக்கு உடுபுடைவைகளும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பெண்கள் அமைப்பு தலைவி திருமதி தவச்சிறி மற்றும் கிராமிய பிரதிநிதிகள் கலந்துசிறப்பித்தனர். (ஒ-301)




# புளியம்பொக்கணைப் பகுதியில் காலாவதியான பொருள்கள் அழிப்பு

தமிழீழ சுகாதார சேவையினரும் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரியும் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்திய பரிசோதனையில் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயச் சூழலில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான உணவுப் பண்டங்கள் கைப்பற்றப்பட்டன.

ஆலய உற்சவத்தை முன்னிட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த காலாவதியான உணவுப் பண்டங்களே இந்தச் சோதனை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டன.

மென்பானங்கள், பிஸ்கட் வகைகள், கடலை, மிக்சர், யோகட், பணிஸ் வகை போன்றவையே காலாவதியான காரணத்தால் கைப்பற்றி உடனேயே அழிக்கப்பட்டன. அத்துடன், சுகாதாரக் கேடாக விற்கப்பட்ட உணவு வகைகளை சிலவும் அழிக்கப்பட்டன.

இதேவேளை-

உணவுப் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பும் சுகாதாரமும், மலசலகூடம் ஒழுங்குபடுத்தல், குடிதண்ணீர் சுத்திகரிப்பு, நடமாடும் வைத்திய சேவை போன்ற நடவடிக்கைகளையும் தமிழீழ சுகாதார சேவையினர் மேற்கொண்டனர்.

இந்த நடவடிக்கை அனைத்தும் தமிழீழ சுகாதார சேவைத் துணைப் பொறுப்பாளர் கலை தலைமையில் இடம்பெற்றன. (ஒ-352-202)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நோயாளர்கள் அதிகரிப்பு

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் நோயாளர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தற்போது நிலவும் வெப்பத்துடன் கூடிய காலநிலை காரணமாக காற்று மூலம் சுவாசத் தொற்றுநோய்கள் அதிகளவில் பரவுகின்றன. இப்பாதிப்புக்குட்பட்டு நாள்தோறும் 600 வரையான நோயளர்கள் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று செல்கின்றனர். அத்துடன், உள்ளகச் சிகிச்சைப் பிரிவில் 150 வரையான நோயாளர்கள் இடநெருக்கடிக்கு மத்தியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஒ)






மாவீரன் பண்டாரவன்னியனை தோற்கடிக்கப்பட்டதனை நினைவுறுத்தி ஸ்தாபிக்கப்பட்ட நினைவுக்கல் அமைந்த இடத்தின் அருகே பொதுமண்டபம் ஒன்று கட்டுவதற்கான அத்திபாரம் அண்மையில் இடப்பட்டது. இக்கட்டடம் அரசநிதியுதவியுடன் ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் அலுவலக அனுசரணையுடன் முத்தையன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் 8 லட்சம் ரூபா செலவில் இப்பொதுமண்டபம் கட்டிமுடிக்கப்படவுள்ளது. வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. நினைவுக்கல்லினை ஒரு படத்திலும் பொதுமண்டபத்தின் அத்திபாரக்கல் இடப்பட்டதனை மறுபடத்திலும் காணலாம். *(படம்: ஒட்டுசுட்டான் செய்தியாளர்)*

# வேரவில் இந்து வித்தியாலயத்துக்கு காணி பெற்றுத்தர நடவடிக்கை

முழங்காவில், மார்ச்30

வேரவில் இந்து மகா வித்தியாலயத்தின் இடபற்றாக்குறையைப்போக்கும் முகமாக காணி பெற்றுத்தருவதாக பூநகரி உதவி அரச அதிபர் மா.சிறிஸ்கந்தகுமார் உறுதியளித்துள்ளார்.

இப்பாடசாலை கடந்த 22 வருடங்களாக இடப்பற்றாக்குறையுடன் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இயங்கிவருகிறது. இதனை நீக்கி உதவுமாறு பாடசாலைச் சமூகமும் நலன்விரும்பிகளும் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதன் பயனாக உதவி அரச அதிபர் காணி பெறுவதற்கான ஒழுங்குகளைச் செய்துதருவதாக உறுதிவழங்கியுள்ளார். (ஒ-323-204)

# கிளிநொச்சி மாவட்டத்தில் புலன்குறைந்தோர் விவரம்

கிளிநொச்சி மாவட்டத்தில் புலன்வலுக் குறைந்தவர்கள் ஆயிரத்து 825 பேர் உள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட மாற்றீடான வலுவுள்ளோர் புனர்வாழ்வுச் சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களில் மாற்றீடான வலுவுள்ள ஆண்கள் ஆயிரத்து 31 பேரும் பெண்கள் 794 பேரும் உள்ளனர் எனவும் அந்த விவரம் தெரிவிக்கின்றது.

பூநகரிப் பிரதேச செயலகப் பிரிவில் 405 மாற்றீடான வலுவுள்ளோரும் கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் 699 மாற்றீடான வலுவுள்ளோரும் கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் 433 மாற்றீடான வலுவுள்ளோரும் உள்ளனர் என இச்சங்க விவரம் தெரிவிக்கிறது.

இந்த மாற்றீடான வலுவுள்ளோரின் தேவைகளை கிளிநொச்சி மாவட்ட மாற்றீடான வலுவுள்ளோர் சங்கம் நிறைவேற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## செஞ்சிலுவைச் சங்க மருத்துவ சேவை

பரந்தன், மார்ச்30

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த உற்சவத்தையொட்டி இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளை ஆலய முன்றிலில் முகாம் அமைத்து உற்சவ கால வைத்தியசேவையைச் செஞ்சிலுவைச் சங்கம் நடத்தியது.

கிளைத் தலைவர் இ.கார்த்திகேசு, செயலாளர் க.கணேஸ், பொருளாளர் தி.அபராஜிதன் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பிரிவு - அலகு நிர்வாக உறுப்பினர்கள், புன்னைநீராவி, தருமபுரம் பாடசாலைகளின் மாணவர்கள் எனப் பலரும் இச்சேவையில் ஈடுபட்டனர். (ஒ-352-202)

# வத்திராயன் பிரதேசத்தில் வீடுகள் கையளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச்30

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் வத்திராயன் வாரிவிட்டான் பகுதியில் 25 வீடுகளும் அரசடி வீதிப் பகுதியில் 135 வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

வாரிவிட்டானில் கிராம அலுவலர் எஸ்.பாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் ஏ.டி.பி.நிறுவனத்தின் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஈஸ்வரபாதம், மருதங்கேணி உதவி அரச அதிபர் ஜெயசீலன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

அரசடி வீதியில் பாலசுந்தரம் தலைமையில் இடம்பெற்ற வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் என்.பி.ஏ., ஏ.எஸ்.பி.நிறுவனப் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

அரசடி வீதியில் அமைக்கப்பட்ட வீடுகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 25 தற்காலிக வீடுகளையும் என்.பி.ஏ.நிறுவனம், ஏ.எஸ்.பி.நிறுவனம் ஆகியவை இணைந்து 110 தற்காலிக வீடுகளையும் அமைத்துக் கொடுத்துள்ளன. (ஒ-202)

## சைவசமய பாட ஆசிரியர்களுக்கு செயலமர்வு

வட்டக்கச்சி, மார்ச்30

கிளிநொச்சி கல்வி வலயத்தில் தரம் 9 இல் சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 2 ஆம் திகதி சனிக்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தரம் 9 இற்கான சைவசமய பாட விசேட செயற்றிட்டம் தொடர்பாக நடைபெறும் இச் செயலமர்வில், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜா கேட்டுள்ளார். (ஒ-405-202)

## அறநெறிப் பரீட்சையில் சித்தி பெற்றோர்

வட்டக்கச்சி, மார்ச்30

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட அறநெறிப் பாடசாலை இறுதிப் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பேர் அதிவிசேட சித்தியடைந்துள்ளனர்.

திருநெறிக் கழக அறநெறிப் பாடசாலையிலிருந்து தோற்றி அதிவிசேட சித்திபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

வி.சுமதி, சி.கிருஷ்ணவேணி, ப.சசிதரன், நா.பத்மப்பிரியா, இ.சசிகரன், வி.மதிவதனி, பா.பிரதீபன், மு.நித்தியா.

கடந்த ஆண்டு நடைபெற்ற மேற்படிப் பரீட்சைக்குத் தோற்றிய 42 மாணவர்களில் 38 மாணவர்கள் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-405-202)

# கிளிநொச்சி திருநெறிக் கழகத்தில் பரிசளிப்பும் நூல் வெளியீடும்

கிளிநொச்சி மாவட்ட திருநெறிக் கழகத்தின் நூல் வெளியீட்டுவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

கழகத் தலைவர் வே.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் செ.சிவஞானம் எழுதிய 'இந்துசமய தகவல் களஞ்சியம்' என்னும் நூல் வெளியிடப்படவுள்ளது.

நூலின் வெளியீட்டுரையைக் கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் க.இராஜமகேந்திரனும் மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் மைதிலி ஸ்ரீ தருமகுலசிங்கமும், கிளிநொச்சி வலயத் திட்டமிடல் [illegible] ஆகியோரும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து கழகத்தால் தரம் 12, 13 இற்கு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள், சிறப்புப் பரிசில்கள், சான்றிதழ்கள் என பன வழங்கும் நிகழ்வு இடம்பெறும்.

இந்நிகழ்வில் வைத்து அறநெறிப் பாடசாலை இறுதிச் சான்றிதழ் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்றவர்களுக்கும் கழகத்தால் நடத்தப்பட்ட நாவலர் நினைவுதினக் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்விற்குப் பிரதமவிருந்தினராகக் கிளிநொச்சி வலயக் கல்விப்பணிப்பாளர் த.குருகுலராஜாவும் கௌரவ விருந்தினராக முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினமும் கலந்துகொள்ளவுள்ளனர். (ஒ-405-202)

## சுனாமி ஓவியக் கண்காட்சி

வட்டக்கச்சி, மார்ச்30

கிளிநொச்சி மாவட்ட மருத்துவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 'சுனாமி அனர்த்தம்' குறித்த சித்திரக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி உடுத்துறை மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ள இக் கண்காட்சிக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உளமருத்துவத் துறைத் தலைவர் பேராசிரியர் தயா சோமசுந்தரம் கலந்துகொள்வார்.

இந்தக் கண்காட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தைச் சேர்ந்த சிறார்கள் வரைந்த ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. (ஒ-405-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்லின ஜேர்மன் செப்பெட் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: J.ராஜா புஸ்பவாசா, ம.ம.வீதி, நெல்லியடி. (43619)

## காணி விற்பனைக்கு

வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் கரந்தன் குறிஞ்சியில் 6½ பரப்பு வயற்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கொழும்பில் - பால சுப்பிரமணியம் தவரத்தினம். 077-6053952, 2625820 யாழ்ப்பாணத்தில் - செ.சிவஞானம், ஐயனார் கோயிலடி, சண்டிலிப்பாய். (C/41879)

வடலியடைப்பு, பண்டத்தரிப்பில் பணிக்குலா வத்தையில் 5½ பரப்பு பனங்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கொழும்பில் - பால சுப்பிரமணியம் தவரத்தினம். 077-6053952, 2625820 யாழ்ப்பாணத்தில் - செ.சிவஞானம் ஐயனார் கோயிலடி, சண்டிலிப்பாய். (C/41881)

நெடுங்கேணி, முல்லைத்தீவில் (பெரிய குளம்) இரண்டரை ஏக்கர் (2½) நெல் வயற் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இராசா பாலசுப்பிரமணியம். 077 6053952, 2625820. (C/41880)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

2 மாத பாவனையிலுள்ள T.V.S, G.X மொடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குணடு. தொடர்பு: T.P.: 0776184504. (43637)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா Prima புறொயிலர் குஞ்சுகள் 30.03.2005 மாலை விநியோகிக்கப்படும். Prima Broiler ஒரு குஞ்சு 40/-. தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச்சந்தி., பி.ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி., தாரகை - முதலாம் கட்டை, பருத்தித்துறை., மதுரா - 221, ஆஸ்பத்திரி வீதி, யாழ்பபாணம்., ராதா - மாவடி, வட்டுக்கோட்டை., றஞ்சித் - 517, ஸ்ரானலி வீதி. T.P.No.: 021 222 3529 (43608)

தரமான Prima Broiler மற்றும் Prima பேட்டுக்குஞ்சுகள் (சிவப்பு) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43638)

## காணவில்லை

சிவப்பு நிற கேப்பை இன நாம்பன் மாடு ஒன்றும் ஒரு மாதத்தில் கன்று ஈனும் (மயிலை) பசுமாடு ஒன்றும் கடந்த வியாழக்கிழமை வட்டுக்கோட்டை பழைய ஆஸ்பத்திரி வீதியில் காணாமல போயுள்ளன. தகவல் தருபவர்களுக்கு 500 ரூபா சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: சோ. மகாலிங்கம், கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (C/41882)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

சுலபமாக ஆங்கிலத்தில் பேசப் பயில By.விக்னேஸ்வரன் ஆச்சாரி, பிளாக் வீதி, சங்கானை. 426 (302), K.K.S.வீதி, யாழ்ப்பாணம்.

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், சீதனம் கொடுக்க வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம், வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிச்சூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (43302)

## தவறிவிட்டன

வடடு.கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி இதையல்நாயகி என்பவருடைய தாலிக்கொடி, 25.03.2005 வெள்ளிக்கிழமை சங்கரத்தைப் பத்திரகாளி அம்மன்கோயில்-தேர்த்திருவிழாவில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரிக்கு தகவல்தரவும். சன்மானம் வழங்கப்படும். (43618)

மோட்டார் சைக்கிளுடைய (NPHJ 9140) இலக்கத்தகடு பயணத்தின் போது தவறி வீழ்ந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0214591 558, 0777290568 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (43642)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன்சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம். (Electronic நிறுவை) தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (43639)

## கலந்துரையாடல்கள்

பூநகரி,மார்ச்30

பூநகரி மகாவித்தியாலயத்தின் தரம் 5 மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தி, வரவு ஒழுங்கு தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் பெற்றோர்களைக் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் பொன்.தில்லைநாதன் கேட்டுள்ளார். (ஓ-403-202)

☆☆☆

தென்மராட்சி,மார்ச்30

தென்மராட்சி கல்வி வலயத்தில் 'பொப்லெப்' திட்டத்தில் உள்ள பாடசாலைகளின் அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ஓ-117-202)

## பரிசளிப்பு விழா

சாவகச்சேரி,மார்ச்30

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைகளிடையே 2003 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட உள்ளூராட்சி நிர்வாக செயற்றிறன் போட்டியில் வெற்றி பெறற சபைகளுக்கான பரிசளிப்பு விழா நாளை வியாழக் கிழமை வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இநநிகழ்வில் பிரதம விருநதினராக வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னான்டோ கலந்து கொள்வார்.

பரிசில்களைப் பெறுவதற்கு வெற்றிபெறற உள்ளூராட்சி மன்றச் செயலாளர்களைச் சமுகமளிக்குமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஓ-31-202)

## தியான மண்டபம் திறந்து வைப்பு

வடமராட்சி,மார்ச்30

வதிரி பரமானந்தா ஆச்சிரமத்தில், ஆச்சிரம நிறுவுநர் சுவாமி பரமானந்தாவின் 10 ஆவது ஆண்டு குரு பூசையையொட்டிப் புதிய தியான மண்டபம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

7 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட இம் மண்டபத்தை சுவாமி சித்ரூபானந்தா திறந்துவைத்தார். (ஓ-173)

## துயர் பகிர்கின்றோம்

யாழ்.பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர் (றெக்கிளமேசன் மேற்கு, ஜே/69) திரு. கிறிஸ்தோத்திரம் கிருபாகரன் அவர்களின் அன்புத் தந்தை

**மரியான் அந்தோனி லெம்பேட்**

அவர்கள் காலமானதையிட்டு ஆறாத்துயரில் மூழ்கி இருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும்.

*நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.* (43634)(42-16-34)

## நீங்காத நினைவலைகள்

**14 ஆம் ஆண்டு** — **23 ஆம் ஆண்டு**



திருமதி **சறோஜினி ஞானபண்டிதன்** (சறோ) (சட்டத்தரணியும், பிரசித்தநொத்தாரிசும்)



அமரர் **பொன்னம்பலம் கணபதிப்பிள்ளை** (சட்டத்தரணியும்,சமாதானநீதிவானும், பிரசித்தநொத்தாரிசும்)

10.02.1956 **தோற்றம்** 15.09.1912

28.02.1991 **மறைவு** 14.03.1982

திதி: 23.03.2005 — திதி: 30.03.2005

**7 ஆம் ஆண்டு**



திருமதி **மரகதவல்லி கணபதிப்பிள்ளை**

**தோற்றம்** 12.09.1925 **மறைவு** 05.02.1998

எமது குடும்பத்தின் ஒளிவிளக்குகளாய்த் திகழ்ந்து எமக்கு நல்வழி காட்டிய அன்புத் தெய்வங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.32,3/4, றோகினி றோட், கொழும்பு -6.

-குடும்பத்தினர் கரணவாய் வடக்கு, உடுப்பிட்டி. (c/41875) (51-16-11)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 13 - 03 - 1925 — மறைவு 16 - 03 - 2005

திருமதி **கந்தையா நாகம்மா**

**எமது இல்ல ஒளிவிளக்காய் ஒளி வீசி பிரகாசித்த அன்னையே! நீங்கள் எம்மைவிட்டுச் சென்றாலும் உங்கள் பூமுகம் என்றும் எம் நெஞ்சைவிட்டு அகலவே அகலாது!**

எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (30-03-2005) புதன்கிழமை வில்லூன்றித் தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (31-03-2005) வியாழக்கிழமை எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. இக்கிரியைகளிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கே.கே.எஸ்.வீதி, 4ஆவது மைல், இணுவில்.*

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

(43632)(26-16-34-42)

# நிலவு.com இன் தமிழ் கணினி 2005

## கண்காட்சியும் கருத்தரங்கும்

காலம்: ஏப்ரல் 6 ஆம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை காலை 9.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை

இடம்: யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபம்

- தமிழ் கணினி
- தமிழ் மென்பொருள்கள்
- தமிழ் மூலம் கணினிக்கல்வி
- கணினி மூலம் பாடசாலைக்கல்வி
- இணையம்
- மின்னஞ்சல்
- கணினி வன்பொருள்
- கணினி வலையமைப்பு
- மென்பொருள் பயன்பாடு
- பல்லூடக வடிவமைப்பு
- கணினி மின்னிதழ்
- கணினி ஜோதிடம்
- கணினி நூல்கள்
- சிறுவர்களுக்கான கதைகள் பாட்டுக்கள்
- இன்னும் பல பல ..........

**கற்றலுக்கான பல்லூடக குறுவட்டுக்கள்**

MS Word · MS Excel · MS PowerPoint · MS Access · Internet &e m@il · PageMaker · PhotoShop · CorelDraw · PhotoDraw · Advance PhotoShop · Computer Hardware · MS FrontPage · DreamWeaver · 3D Studio MAX · ASP · JSP · Flash · Visual Basic · JAVA · Windows Basics · Oracel · MAYA · HTML · Software · Collections · Thamizha · Thirukkural

**கம்ப்யூட்டர் ருடே** பழைய புதிய புத்தகங்கள் அனைத்தும் விஷேட விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**275, Jaffna Road, Manipay. 0777 740413**

ஊடக அனுசரணை: உதயன்

(சி.41689)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரையோர மக்களை மீண்டும் ஓடவைத்த சுனாமி

வடமராட்சிக் கரையோரம் வாழ்கின்ற மக்கள் மிகுந்த செல்வச் செழிப்புடன் வாழ்ந்த காலம் ஒன்று உண்டு. அந்தக் காலம் எல்லாம் மறைந்து இப்போது அவர்கள் வாழ்வுடன் விதிவிளையாடுகின்றது.

முன்பு யுத்தத்தின் மூலம் அவர்கள் தமது உடைமைகள், வீடு வாசல்கள் என்பவற்றை இழந்தார்கள். அதன் பின்னர் கடந்த ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதியை அவர்கள் என்றுமே மறக்கமாட்டார்கள்.

நாட்டில் ஏற்பட்ட சமாதானச் சூழலைப் பயனபடுத்தித் தமது தரத்தை உயர்த்துவதற்கு முயன்றுகொண்டிருந்தவேளை சுனாமி என்ற ஆழிப்பேரலை அவர்களின் வாழ்வாதாரத்தை அடியோடு அள்ளிச் சென்றது.

பெருமளவு உயிரிழப்புகளையும் உடைமை இழப்புக்களையும் சந்தித்தபோதும் மனம் தளராமல் உழைப்பையே மூலதனமாக்கி உயர முற்பட்டவர்களுக்கு மீண்டும் ஓர் அதிர்ச்சி; அச்சம்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு ஏறபட்ட 'சுனாமி' அபாய அறிவிப்புத்தான் இதற்குக் காரணம்.

வடமராட்சிக் கரையோர மக்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் கடலன்னையின் மடியிலே தவழ்ந்து தமது அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துபவர்கள். கடல் அவர்களுக்கு விளையாட்டு மைதானம் போன்றது. எந்த வேளையிலும் அவர்கள் கடலில் சென்று கரை திரும்பும் வல்லவர்கள்.

இப்படியாக அவர்களின் வாழ்வுடன் பிரிக்க முடியாத தொடர்பைக் கொண்டுள்ள கடலைக் கண்டால் இன்று அவர்கள் கலங்குகின்றார்கள்; கிலி கொள்கின்றார்கள். மனமுடைந்து நொந்தவர்களாகக் கடலைக் கண்டதும் மறு பக்கம் திரும்புகின்றார்கள்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இந்து சமுத்திரத்தில் - இந்தோனேஷியாவின் சுமாத்திராத் தீவுப்பகுதியை - அதிசக்திவாய்ந்த நிலநடுக்கம் தாக்கியது ரிச்டர் அளவில் 8.2 என அது முதலில் பதிவாகியது.

இந்த நிலைநடுக்கத்தையடுத்து சுனாமி என்னும் ஆழிப்பேரலை அனர்த்தம் உருவாகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டதால் ஆசிய நாடுகள் எங்கும் பெரும் களேபரம் ஏற்பட்டது.

குறிப்பாக இலங்கை, இந்தியா, அந்தமான் தீவுகள் உட்படப் பலநாடுகளின் கரையோரப் பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகருமாறு சர்வதேச மற்றும் உள்ளூர் ஊடகங்கள் அனைத்தும் அறிவித்தல்களை விடுத்தவண்ணமிருந்தன.

இலங்கை நேரப்படி இரவு 10.30 மணியளவில் இந்த அறிவித்தல்கள் வெளியானதால் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் இருந்த மக்கள் செய்வதறியாது திகைத்தனர். கையில் கிடைத்தவற்றை எடுத்துக்கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கி ஓடினார்கள்.

யாழ். குடாநாட்டில் வடமராட்சி, வடமராட்சி கிழக்கு கரையோரப் பகுதி மக்களுக்கு உடனடியாக அறிவித்தல்கள் வழங்கப்பட்டன.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினரும் கடற்புலிகளும் விரைந்து செயற்பட்டு ஒலிபெருக்கிகள் மூலம் மக்களைப் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்ந்து செல்லுமாறு அறிவித்தனர்.


வடமராட்சியில் முனை, சுப்பர்மடம், இன்பருட்டி, சக்கோட்டை, வல்வெட்டித்துறை, ஆதிகோயிலடி, கற்கோவளம், பொலிகண்டி ஆகிய கரையோரப் பகுதி மக்களும், வடமராட்சி கிழக்கில மணற்காடு, குடத்தனை, பொற்பதி ஆகிய காடு, பொற்பதி ஆகிய கரையோரப் பகுதி மக்கள் உடனடியாக வெளியேறி மிகவும் உயரமான மணல் திட்டுக்களை நோக்கி ஓடினார்கள்.

கரையோரக் காவலரண்களில் இருந்த படையினர் முண்டியடித்துக்கொண்டு காவலரண்களை விட்டு வெளியேறினார்கள். குடத்தனையில் பொதுமக்களை வெளியேறிச் செல்லுமாறு படையினர் எச்சரிக்கை வேட்டுக்களையும் தீர்த்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இருந்தது.

கடலின் அசைவுகளை நன்கு அவதானித்துக்கொண்டிருந்த அப்பகுதி மீனவர்கள் ஓர் அசாதாரண நிலை தோன்றியுள்ளதாகத் தமக்கிடையே பேசிக்கொண்டனர். கடற்கரையில் கடல் நீர் மிகவும் கலங்கிய நிலையில் காணப்பட்டது. அதேபோல காலநிலையும் சற்று வித்தியாசமாகக் காணப்பட்டது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 26ஆம் திகதி சுனாமி ஆழிப்பேரலை ஏற்படுவதற்கு



**சுமாத்திராத் தீவை நிலநடுக்கம் தாக்கியதையடுத்து நேற்றுக் காலை வடமராட்சிக் கடல் வழமைக்கு மாறான முறையில் காணப்பட்டது. கடற்கரையில் நீர் வற்றுவதும் கூடுவதுமான தளம்பல் நிலை இருந்தது. கடற்கரையின் ஒரே இடத்தில் நின்றவாறு எடுக்கப்பட்ட இரு படங்களையே மேலே காண்கிறீர்கள். காலை 11.05 மணியளவில் எடுக்கப்பட்ட படத்தில் கடற்கரையில் நீர் வற்றி கற்கள் தெரிவதையும் சுமார் 20 நிமிடத்தின் பின்னர் 11.25 மணியளவில் எடுக்கப்பட்ட படத்தில் கடல் நீர் மட்டம் உயர்ந்து கற்கள் மறைந்துபோயுள்ளதையும் படங்களில் காணலாம்.**

*(படங்கள் : தேவா)*

கரையோரக் கிராம மக்களும் இரவிரவாக உடனடியாக வெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

ஏற்கனவே ஆழிப்பேரலையின் கோரத் தாண்டவத்தை நன்கு அறிந்திருந்த மக்கள் சுனாமி பற்றிய அறிவித்தல்கள் கிடைத்ததும் தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக விரைவாக வெளியேறிப் பாதுகாப்பான இடங்களை அடைந்தனர் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் தெரிவித்தனர்.

**தேவா, சுந்தர்**

சுனாமி அச்சம் பற்றிய அறிவித்தல் கிடைத்த நேரம் இரவாக இருந்தமையால் மக்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். இருளில் தமது கையில் பிடிபட்ட உறவுகளை இழுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாக வெளியேறினார்கள். பாதுகாப்பாக இடங்களைச் சென்றடைந்தபோதும் அவர்கள் வானொலிப் பெட்டிகளைக் கைவிடவில்லை. சுனாமி தொடர்பாக வானொலியில் விடுக்கப்படும் அறிவித்தல்களை அவர்கள் கண்துாங்காது விழித்திருந்து கேட்டவண்ணமிருந்தனர்.

வடமராட்சி கிழக்கில் குடத்தனை, மணற்

விடியும்வரை பாதுகாப்பான இடங்களில் பொழுதைக் கழித்த மக்கள், மீண்டும் காலையில் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் சென்றனர்.

நேற்றுக்காலையில் மீனவர்கள் எவரும் கடலில் இறங்கவில்லை. கரையோரப் பகுதி வீதிகள் அனைத்தும் சனநடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்பட்டன.

ஆங்காங்கே கடற்கரையில் நின்றவாறு மீனவர்கள் கடலை வெறித்துப் பார்த்தபடியிருந்தனர்.

காலை 10 மணிக்குப் பின்னர் வடமராட்சிக் கரையில் ஒருசில மீனவர்கள் தமது கட்டுமரங்களைக் கடலில் இறக்கித் தமது அன்றாட உணவுக்கான மீனைப் பிடிக்கச் சென்றனர். சென்ற மீனவர்கள் ஒரு சில நிமிடங்களின் பின்னர் கரைக்குத் திரும்பினார்கள். கடலில் வழமைக்கு மாறான நீரோட்டம் இருந்தமையினாலேயே நாம் கரை திரும்பியதாக அவர்கள் தெரிவித்தனர்.

வடமராட்சி, இன்பருட்டி, சுப்பர்மடம், பொலிகண்டி, ஆதிகோயிலடி ஆகிய கடற்கரைகளில் நீர் வழமையைவிட வற்றியிருந்தது. இதனை அப்பகுதி மீனவர்களும் உறுதிசெய்தனர். இடையிடையே சிறுசிறு அலைகள் கரையை வந்த மோதிச் சென்றதைக் காணக்கூடியதாக

முதல்நாள் இவ்வாறானதொரு சூழ்நிலையே கடலில் காணப்பட்டதாகவும் அதேபோன்றதொரு நிலையே இப்போதும் கர்ணப்படுவதாகவும் வயது முதிர்ந்த மீனவர் ஒருவர் தெரிவித்தார்.

வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளின் கரையோரத்தில் இருந்த சில பாடசாலைகளும் நேற்று சுனாமி அச்சம் காரணமாக இயங்கவில்லை. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை வெளியேவிடப் பயந்து தம்முடனேயே வைத்திருந்தனர். மக்கள் அனைவரினதும் முகங்களில் ஒருவித பயம் - அச்சம் காணப்பட்டது. பெண்கள் ஆரவாரம் ஏதுமின்றி அமைதியாகத் தமது அன்றாடக் கடமைகளைக் கவனித்துக்கொண்டிருந்தனர். ஆண்கள் வீடுகளுக்கு வெளியே அமர்ந்திருந்தவாறு கடலையே அவதானித்துக்கொண்டிருந்தனர்.

எவ்வாறாயினும் சுனாமி வடமராட்சிப் பகுதியில் கரையோர வாழ்மக்களின் மனங்களின் நீங்காத அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாக உணர முடிந்தது. முன்பெல்லாம் கடலை அன்புடன் நோக்கிய அவர்கள் இப்போது வெறுப்புடன் பார்க்கின்றார்கள். இதற்குக் காரணம் மீண்டும் தோன்றியுள்ள சுனாமி எச்சரிக்கைதான். தமது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு என்ன வழியுண்டு என்பதுதான் அவர்கள் அனைவரினதும் தற்போதைய சிந்தனை. ★

# யுத்தம் ஓய்ந்தாலும் அலைச்சல் ஓயவில்லை

கடந்த பல வருடங்களாக யுத்தம் எமது மக்களைப் பீதிக்குள்ளாக்கியது. அதன் தாக்கம் தற்போது ஓரளவு குறைந்துள்ளது.

போர்க்காலத்தின்போது இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து அலுத்துப்போய்விட்ட எமது மக்கள், இந்தச் சமாதானச் சூழலிலாவது நிம்மதியாக அலைச்சல், உலைச்சல் இல்லாமல் வாழலாம் என்று நினைத்துக்கொண்டிருக்கும்போது சுனாமிப் பயப்பீதி அவர்களை ஓரிடத்தில் இருந்து ஆறவிடாது "அடித்து, அழித்து" விரட்டிக்கொண்டிருக்கின்றது.

கடந்த வருடம் டிசெம்பர் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி கொலை அலைகள் எங்களில் எத்தனையோ உறவுகளை அள்ளிக் கொண்டு சென்றுவிட்ட அந்தக் காயங்கள், மன வடுக்கள், சோகங்கள் இன்னும் ஆறவில்லை.

அந்த அனர்த்தம் ஏற்பட்டு மூன்று மாதங்களும் மூன்று நாள்களும் கடந்த நிலையில் மீண்டும் சுமாத்திராவில் நிலநடுக்கம் என்ற செய்தி எஞ்சியுள்ள எமது மக்களின் காதுகளுக்கு நேற்றுமுன்தினம் நள்ளிரவு 12 மணிக்கு எட்டியது.

உழைத்த களைப்பை உறங்கித் தீர்க்க முயன்றுகொண்டிருந்த கரையோரப் பிரதேச மக்கள் அடித்துப் பிடித்து பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடினார்கள். இயற்கை விரட்ட ஓடியவர்கள் இறைவனை நாடுவது இயல்பு அல்லவா? பெரும்பாலானவர்கள் வழிபாட்டிடங்களில் அடைக்கலம் தேடினார்கள்.

இறைவனின் பணியாளர்கள் இருந்த இடத்திற்கு தஞ்சம் கோரி குருநகர்ப் பகுதி மக்கள் ஓடியபோது அந்தத் தலத்திற்குப் பொறுப்பானவர்கள் வாசற்கதவுகளை அடைத்தனர். 'தட்டுங்கள் திறக்கப்படும்' என்றதை நம்பிய மக்கள் வீதியிலேயே இரவைக் கழித்த பரிதாபமும் நடந்தது வேதனையான ஒன்று.

சுனாமி அனர்த்தம் தொடர்பான முன்னறிவித்தல்கள் வெளியானவுடனேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் களத்தில் இறங்கி மக்களை எச்சரித்து வெளியேற்றிக்கொண்டிருந்தனர். இவர்களுடன் இளைஞர்களும் இணைந்து வாகனங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் மக்களுக்கு எச்சரிக்கை



அறிவுறுத்தல்களை வழங்கி அவர்களை வெளியேற்றிய வண்ணமிருந்தனர்.

இதேவேளை, அயல் வீட்டில் உறங்கிக் கொண்டிருந்தவர்களையும் தட்டி எழுப்பிக் கொண்டு பாதுகாப்பான இடங்களைத் தேடி மக்கள் விரைந்து சென்றுகொண்டிருந்தனர்.

போர்க்காலச் சூழல் எம்மிடையே எவ்வளவோ இழப்புக்களையும் மனவடுக்களையும் ஏற்படுத்திவிட்டுப் போயிருந்தும் எம் இன மக்களிடையே ஆபத்துக்குதவும் தோளெடுக்கும் ஒற்றுமையை ஏற்படுத்தியிருப்பதைத் இதன் மூலம் உணரமுடிந்தது.

இதற்கிடையில், அபயம் தேடி ஓடிவந்தவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்புவதில் இராணுவத்தினர் ஒத்துழைத்தமை ஆறுதலளிக்கும் விடயமாகும். அவர்கள் ஆலய மணிகளை அடித்து மக்களை எச்சரித்துக் கரையோரப் பகுதிகளில் இருந்து வெளியேற்றியுள்ளனர். இந்த நிலையில் இவ்வாறான நடவடிக்கைகள் நடக்கின்றமை பாராட்டத்தக்க விடயம்தான்.

நள்ளிரவில் இந்தப் பூகம்பத் தகவல் வெளியாகியமையால் இங்குள்ள உறவுகள் அவற்றை அறிந்திருக்குமா என்ற அச்சத்தில் வெளிநாட்டில் உள்ளவர்கள் தொலைபேசிகள் மூலம் உறவினர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள் வெளியேறுவதற்கு உதவியுள்ளனர்.

அதிகளவு பாதிப்பு ஏற்படாத இந்த அனர்த்தத்தின் போது இவ்வளவு எச்சரிக்கை ஏற்படுத்தியவர்கள் கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி இதேமாதிரி ஏதாவது ஒரு சமிக்ஞையை வெளியிட்டிருந்தால் எவ்வளவோ உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கும் என்ற எண்ணம் அனைவர் உள்ளங்களிலும் எழுந்திருக்கும் என்பது நிச்சயம்.

சுனாமி தாக்காத நிலையில் முன்னெச்சரிக்கை வீணான ஒன்றோ என்ற கருத்தொன்றும் நேற்றுக்காலை எழுந்ததைக் கேட்க முடிந்தது. இது குறித்து கடற்றொழிலாளர் சமாசங்களின் ஒன்றியத் தலைவர் சி.தவரட்ணம் கூறுகையில் -

யாழ். நகரின் கரையோரப் பகுதிகளில் எதுவிதமான அனர்த்த அறிகுறிகளும் காணப்படவில்லைத்தான். ஆனால், வடமராட்சிக் கடற்பரப்பில் கடல் மட்டம் உயர்ந்துள்ளது என்று வடமராட்சி மீனவர் சங்கத்தின் மூலம் அறிய முடிகின்றது. இருந்தும் எமது கடற்பிரதேசத்திற்கு நேரடியாகச் சென்று பார்க்க முடியாத நிலை எமக்கு ஏற்பட்டுள்ளது. கரையோரப் பகுதிகள் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படுவதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

**கங்கா, தீபா**

சுமாத்திராவில் பூகம்பம் ஏற்பட்டுள்ளது குறித்து சில மணி நேரங்களுக்குள்ளேயே அனைத்து இடங்களுக்கும் அனைத்து ஊடகங்கள் மூலமும் அறியப்படுத்திவிட்டார்கள்.

இந்த நிலைமையைப் பார்க்கும்போது சுனாமி அழிவில் இருந்து நாம் தப்ப வாய்ப்புள்ளதாகவே தோன்றுகின்றது - என்றார்.

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது அது தொடர்பான தகவல், விழிப்புணர்வு எதுவும் எமது மக்களிடையே இல்லாமையால் பாரிய இழப்பு ஏற்பட்டது.

ஆனால், தற்போது அது தொடர்பான விழிப்புணர்வு மக்களிடையே உள்ளமையால் சாதாரணமாக ஏற்படும் நிலநடுக்கம் கூட சுனாமி ஆகிவிடுமோ என்ற பயம் எமது மக்களிடையே வந்துவிட்டது. இதனால், அவர்கள் எந்த நேரமும் விழிப்புடன் செயற்படுகின்றனர். இவ்வாறான நிலைமை தொடர்ந்தும் காணப்படுமாக இருந்தால் உயிரிழப்புக்களையாவது ஓரளவு குறைத்துக் கொள்ளலாம். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.மேற்கில் முதியோர் சங்கம் விரைவில் ஆரம்பிக்கத் திட்டம்

வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் கிராமமட்டத்தில் முதியோர் சங்கங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை சமூகசேவை உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

சமூகசேவை அமைச்சின் பணிப்புக்கிணங்க இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளை இணைத்தோ கிராம அலுவலர் பிரிவு ரீதியாகவோ முதியோர் சங்கம் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஏப்ரல் மாத நடுப்பகுதியில் வலி.மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் முதியோர் சங்கங்கள் செயற்படத் தொடங்கும் என்று சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஒ-175-203)






# நூல்கள் அன்பளிப்பு

ஆசிய அபிவிருத்தி நிறுவனத்தால் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் நூல் நிலையத்திற்கு தொழில்நுட்பவியல் நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வாரம் வழங்கப்பட்ட இந்நூல்கள் நேற்று முதல் மாணவர்களின் பயன்பாட்டிற்கு நூல் நிலையத்தில் வைக்கப்பட்டன. பொறியியல், கணனித்துறை சார்ந்த நூல்கள் உட்பட பல்வேறு வகையான நூல்கள் இதில் அடங்குகின்றன.

இதேவேளை - தொழில்நுட்ப பயிற்சித் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் பணிப்பின் பேரில் யாழ்.தொழில்நுட்பக் கல்லூரிக்கு வீடியோ ஒளிப்படக் கருவி ஒன்றும் வழங்கப்பட்டுள்ளது.(ஒ-12)

# சுழற்சிமுறைக் கடன

வட்டுக்கோட்டை,மார்ச்30

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின மூலம் சுழற்சிமுறைக் கடன் வழங்கப்படவுளளது. கடன் தேவைப்படுவோர் எழுத்துமூலம் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

சங்கானை, காரைநகர் பிரதேச செயலக மற்றும் உதவி அரச அதிபர் பணிமனைப் பிரிவுக்குட்பட்ட சங்கப் பயனாளிகள் தம்மிடம் தொடர்புகொண்டு எழுத்துமூலம் விண்ணப்பிக்குமாறு சங்கத் தலைவர் அ.ரகுநாதன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-161)


UNIVERSITY OF JAFFNA, SRILANKA

Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE)

Intensive course in English Language Skills
Test on English Language Skills

The above test which was scheduled to be held on 2nd April has been postponed due to unavoidable circumstances. New date will be informed later.

**Director**,
Local Technical Secretariat. (41884)(21-11-16)

IRQUE Project
28.03.2005


# நெடுந்தீவு ஆஸ்பத்திரிக்கு 'ஓட்டோ' அன்பளிப்பு

நல்லூர்,மார்ச்30

யாழ். அரச அதிபர் பணிமனையால் நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கென வழங்கப்பட்ட 'ஓட்டோ' எதிர்வரும்-- 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரியிடம் கையளிக்கப்படவுள்ளதாக வைத்திய அதிகாரி எஸ். திருநாவுக்கரசு தெரிவித்தார்.

குறிப்பிட்ட 'ஓட்டோ வாகனம்' வந்து சேர்ந்ததும் நெடுந்தீவு மேற்கில் உள்ள வைத்தியசாலையில் சிகிச்சை மேற்கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகத் தெரிகின்றது. (ஒ-111)

# பாராட்டுவிழா

மணிவிழாக் காணும் சிவத்திரு.வ.குமாரசாமி ஐயரின் சேவையைக் கௌரவிக்கும் பாராட்டு நிகழ்வு எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்குத் தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையைச் சேர்ந்த இ. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோம சுந்தர பரமாசார்ய சுவாமிகள், அருட்கவி சி.வினாசிததம்பி, சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் ஆகியோர் ஆசியுரைகளை வழங்குவர். டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை, சிவத் தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், ஆசிரியர் ஆ.சிவநாதன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்குவார்கள். (ஐ-173)

## நெஞ்சை விட்டகலாத நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| 31 ஆம் நாள் நினைவஞ்சலி | | | 12 ஆம் நாள் நினைவஞ்சலி | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் 1915 - 10 - 01 |  | மறைவு 2005 - 03 - 01 | தோற்றம் 1921 - 08 - 14 |  | மறைவு 2005 - 03 - 20 |

அமரர்
**குருசுப்பிள்ளை ஸ்ரனிஸ் றோஸ் இராசையா**
(உப தபால் அதிபர், திடீர்மரண விசாரணை அதிகாரி, சமாதான நீதிவான்)

திருமதி
**ஸ்ரனிஸ் றோஸ் இராசையா அன்னம்மா**

**நல்லவராய் இவ்வுலகில் வாழ்ந்திட வேண்டுமென்று**
**நல்லவர்கள் சொல்லி வைத்த வாக்குறுதியை மனதிலிருத்தி**
**~ வாழ வைத்த தெய்வங்களே!**
**எம்முயர்வுக்காய் அல்லும் பகலும் உமை வருத்தி உழைத்தவர்களே!**
**எம்மனம் என்றுமுங்களை மறந்திருக்குமோ மண்ணிதிலே**
**என்றுமிறை பாதமதில் வாழ்கவென்று வேண்டுகின்றோம்.**

ஆஸ்திரேலியாவில் மரணித்த எமது பெற்றோரின் பிரிவுச் செய்யறிந்து எமதில்லம் வந்து எமக்கு ஆறுதல் கூறியோர், தொலைபேசியூடாக அனுதாபங்களைத் தெரிவித்தோர் மற்றும் எம் துயரில் பங்குகொண்ட அன்புள்ளங்கொண்டவர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக நாளை (31-03-2005) வியாழக்கிழமை செம்பியன்பற்று புனித பிலிப்நேரியார் ஆலயத்தில் முற்பகல் 11.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத் தொடர்ந்து எமதில்லத்தில் நடைபெறும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பா.ஸ்.வெண்டக்கோன்** (மருமகன்),
**ஸ்.றோசலின்** (மகள்),
**ஸ்.மேரி ஆன் (சசி)** (பேர்த்தி).

செம்பியன்பற்று வடக்கு.
(43641)(26-21-11-16)


## சிறந்த பாடகிகள் தேவை

யாழ்.ஈழ நல்லூரில் இயங்கி வரும் சிறந்த இசைக்குழுவிற்கு சிறந்த பாடகிகள் தேவைப்படுகின்றனர். நேரிலோ அல்லது கடித மூலமோ 05.04.2005 திங்கட்கிழமைக்கு முன்னதாக தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

**ஸப்தஸ்வரா இசைக்குழு,**
**இ.சிவராமன்,**
13A, அரச வீதி, முத்திரைச்சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி-0776146393
**ஸ்ரீகுகன் துளசி நெற்கொம்,**
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
(43620) தொலைபேசி: 021 4590746 (21-11-16-32)


## யாழ்ப்பாணம் மாநகரசபை ஆதனவரி அறிவித்தல் - 2005

2005 ஆம் ஆண்டு முதலாம் கந்தாயத்திற்கான ஆதன வரியை 2005. 03. 31ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3. 30 மணிக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இவ்வலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் விவரப்படி வெலியாற்றுப் பணம் அறவிடப்படும் எனவும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக்காணிகள் - 15%
ஏனைய காணிகள் - 20%

நிலுவை உட்பட 2005ஆம் ஆண்டிற்கான வரியைச் செலுத்த ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் மாநகர சபை கட்டளைச்சட்டம் அத்தியாயம் 252, பிரிவு XII 252 (1) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருள்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

காசோலையாகச் செலுத்துவோர் மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம் என எழுதி அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

கலாநிதி க.குணராசா,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-41587)
(21-11-16)


**இன்று புதன் மாலை முதல் ஆரம்பம்!**

**தமிழன்**
தமிழன் (Sinhala script)
**THAMILAN**
AUTHENTIC THAMILAR CUISINE
**(FULLEY A/C)**

காலை உணவு BREAK FAST | மதிய உணவு LUNCH | இரவு உணவு DINNER

**REAL THAMILAR FOOD**
முற்றிலும் தமிழர் பாரம்பரிய
முறையிலும் சுவையிலும்
தயாரிக்கப்பட்ட உணவுகள்

**YARL PAADY RESIDENCY**
51C, AMMAN ROAD,
NALLUR, JAFFNA.
Phone: 222 6868, 0777 276636
(43643) (24-21-11-16)



வெளிவந்துவிட்டது
## நடைமுறை ஆங்கிலம்

அன்றாடம் கதைக்கும் ஆயிரக்கணக்கான வசனங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு. ஒவ்வொருவருடைய தேவைக்குமேற்ப மூன்று புத்தகங்களாக வெளிவந்துள்ளது.

**பக்கங்கள் - 480. விலை ரூபா 540/-**

❑ ஆசிரியர்களுக்கானது ❑ அலுவலர்களுக்கானது ❑ மாணவர்களுக்கானது

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய புத்தகங்கள்

குறிப்பு : அதிகமான வேண்டுதல்களினால் பதிவுசெய்து 15 நாட்களின் பின்பே பெறமுடியும்

**சலுகைக்கட்டணம்**
**31.03.2005 வரை ரூபா 300/- மட்டுமே**

நேரடியாக அல்லது SAAMSTECH என்ற பெயருக்கு JAFFNA தபாலகத்தில் மாற்றத்தக்கான காசுக்கட்டளையினை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்

**SAAMSTECH, 841, Hospital Road, Chundikkuli, Jaffna.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# யாழ்.வேலணை மேற்கு, பெரியபுலம்
# அருள்மிகு ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையார் [முடிப்பிள்ளையார்] ஆலய
## புனராவர்த்தனப் பிரதிஷ்டா நவகுண்ட மஹாயாக நூதன இராஜகோபுர
# மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர் - 30-03-2005



**மஹா கும்பாபிஷேகம்:**

**பங்குனி மாதம் 17ஆம் நாள் (30.03.2005)புதன்கிழமை காலை 9.13 மணிமுதல் 10.13**
மணிவரை வரும் அனுஷ நக்ஷத்திரத்துடன் கூடிய இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். பங்குபற்ற விரும்புவோர் பரிபாலன சபையுடன் தொடர்புகொள்ளவும்.
மண்டலாபிஷேக பூர்த்தி: பார்த்திப வருஷம் சித்திரை மாதம் 13ஆம் நாள் (26.05.2005) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிமுதல் நவோத்தரசாகஸ்ர மஹாசங்காபிஷேகம், மண்டலாபிஷேக பூர்த்தி நண்பகல் 12.00 மணி அளவில் வருடாந்த மஹோற்சவம் துவஜாரோகணம்(கொடியேற்றம்) நடைபெற்று, தொடர்ந்து 11 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

*"விநாயகர் பாதம் தொழ மாண்புகழ் மிகுந்து வரும்"* *"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

அனைவரும் வருக ஐங்கரன் அருள் பெறுக!

பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் ஆலயம்
வேலணை மேற்கு
தொலைபேசி: 021-4590840

*ஆலய பரிபாலன சபையினர்.*

## ஆசியுரை

சைவ செம்மனச் செல்வர்களே!

வேலணை, பெரியபுலம் ஸ்ரீமஹா கணபதிப்பிள்ளையார் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நிகழவிருப்பதையறிந்து பேருவகை எய்துகிறோம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படும் இக்குடமுழுக்குப் பெருவிழா, தவமுடையோருக்கே காணக்கிடைக்கும் திருக்காட்சியாகும். கும்பாபிஷேகம் காண்பது கோடி புண்ணியம் மற்றும் குற்றம் பொறுக்காத மூர்த்திகள் போலல்லாது எமது பிழைகளை எல்லாம் பொறுத்து அருள்பாலிக்கும் கருணாமூர்த்தி விநாயகப் பெருமான். எந்தவொரு வழிபாடுகளிலோ சடங்குகளிலோ அவருக்கே முதற்பூஜையாற்றி அவைகளைத் தொடங்குகிறோம். யாழ். குடாநாட்டில் விநாயகப் பெருமானுக்கும் வைரவப் பெருமானுக்குமே அநேக ஆலயங்கள் அமைக்கப் பெற்றிருப்பது கண்கூடு. இதனால், சைவமக்கள் இம்மூர்த்திகளின் பால்வைத் திருக்கும் அசைக்கமுடியாத பக்தியும் நம்பிக்கையும் வெள்ளிடைமலை. ஓங்கார உருவான அவரது வடிவம் பல அரிய தத்துவார்த்தங்களை உள்ளடக்கி விளக்கும். மிக எளியமுறையில் வழிபடக் கூடிய மூர்த்தி விநாயகரே. அவரைப் பிரதிஷ்டை செய்ய ஒரு மஞ்சள் உருண்டை, ஒரு கோமய உருண்டை போதும். எனவே, அவருக்கு நாம் எடுக்கும் விழாக்கள், கைங்கரியங்களின் அருமை, பெருமைகளை விளக்குவது எளிதல்ல. இதில் பங்குகொள்ளும் அன்பர்களை உளமார வாழ்த்தி எல்லாம் செவ்வனே நிறைவுற விநாயகப் பெருமானின் பொன்னார் திருவடிகளைத் தியானித்து எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

*என்றும் வேண்டும் இன்ப அன்பு*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்**
ஆதீன முதல்வர், இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

## பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசியுரை

"லம்போதரம் மஹா காயம்
சர்வ விக்ன நிவாரகம்
சர்வ காரியார்த்த சித்தியர்த்தம்
த்யாயேத் சித்தி விநாயகம்".

உலகமெல்லாம் உணர்ந்து உத்திபெறவேண்டும் என்ற பெருங்கருணையினால் எல்லையற்ற பரம்பொருள் எடுத்த வடிவங்கள் எண்ணில. இதனை உணரும் வாய்ப்பு பிறவிகளிலே மேம்பட்ட பிறவியாகிய மானிடப் பிறவி எடுத்த எமக்கே உரித்தாகும். அதனால்தான்

"துர்லபம் மானுஷம் ஜென்ம
சிவதர்மமோபி துர்லப"

என ஆகமங்கள் கூறுகின்றன. இத்தகு வடிவங்களிற் சிறந்து விளங்குவது விநாயகவடிவமாகும். சகல செல்வங்களுக்கும் மலிந்து பொலிந்து விளங்கும், சைவமும், தமிழும், அன்பும், பண்பும் சிறந்து விளங்கும் மக்கள் வாழ்வாங்குவாழும் வேலணை மேற்கு பெரியபுலம் என்னும் இந்த ஊராகும். விநாயகப் பெருமானின் அடியார்கள் பேரார்வத்துடன் பக்தி முயற்சியினால் கட்டப்பட்ட பஞ்சதள இராஜகோபுரம் மற்றும் மூலமூர்த்தியாகிய விநாயகர், பரிவாரமூர்த்திகளுக்கும் மஹோ கும்பாபிஷேகம் எல்லாம் வல்ல ஸ்ரீ விநாயகப் பெருமானின் பேரருளினால் இன்று சிறப்பாக நடைபெறுகிறது. மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் இந்த கும்பாபிஷேகத்தைத் தரிசித்தவர்க்கு கிட்டும். வேலணைமக்கள் இலங்கையில், வெளிநாடுகளில் எப்பகுதியிலும் சென்ற சென்ற இடமெல்லாம் சிறப்போடு விளங்குவதற்குக் காரணம் முடிப்பிள்ளையார் எனப்போற்றும் ஸ்ரீ மஹா கணபதிப்பிள்ளையாரின் அற்புத அருள் என்றே கூறலாம். "கோபுரதரிசனம் கோடி புண்ணியம்" என்பதை உணர்த்தும் பஞ்சதள இராஜகோபுரம் அழகுற அமைத்து வேலணை மக்களின் பக்தியின் எழுச்சியை எடுத்துக்காட்டுகின்றது. இந்தக் கோயில் சாஸ்திர ரீதியாகத் திருப்பணிகள் பூரணமாகி மேலான மஹாகும்பாபிஷேகம் இனிது நிகழத் தோன்றாத் துணையாக இருந்து அருள்பாலிக்கும் விநாயகப் பெருமானின் பாதாரவிந்தங்களை முக்கரணங்களுடன் வணங்குகின்றேன். மஹாகும்பாபிஷேகம் யாவும் செவ்வனே நிறைவுபெற பேருதவியாய் இருந்த சிவாச்சார்யர்களுக்கும் சிவநேயச் செல்வர்களுக்கும் ஆலய பரிபாலன சபை அன்பர்களுக்கும் திருப்பணி வேலைகளை அழகுற, சிறப்பாகச் செய்துமுடித்த சிற்பக் கலைஞர்களுக்கும் வேலணை வாழ் நல்லோர்கள் அனைவருக்கும் கும்பாபிஷேகத்தைத் தரிசித்த பக்தர்கள் அனைவருக்கும் ஞானமத, ஐந்துகர, மூன்றுவிழி, நால்வாய், ஆனைமுகன் தனது இன்னருளை வாரி வாரி வழங்கி எல்லோரும் பல்லாண்டுகாலம் நோய்நொடியின்றி சகல சம்பத்தும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டுமென மனம், மொழி, மெய்யாலே விநாயகப்பெருமானின் பாதாரவிந்தங்களைப் பிரார்த்தித்து நல்லாசி கூறுகின்றேன்.

உலோகா சமஸ்த்தா சுகினோ பவந்து

சிவாகம கிரியா தத்துவ நிதி. பிரம்மஸ்ரீ பால பஞ்சாட்சரச் சிவாச்சார்யார்
*(ஆஎழு. யாழ்/வண்ணை ஸ்ரீ காமாஷி அம்பாள். தேவஸ்தான பிரதமகுரு)*

## முடிப்பிள்ளையாரின் திருவடி தொழுது பேரின்பப் பெருவாழ்வு பெறுவோம்

இறைவனை அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் மக்கள் வழிபட்டு வருகின்றனர். இவ்வழிபாட்டு முறைகள் இந்து சமயத்தின் பல்வேறு பிரிவுகளிலும் காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் தத்தம் மனப்பக்குவம், விருப்பம் முதலியவற்றிற்கேற்ப இம்முறைகளில் ஒன்றையோ, பலவற்றையோ பின்பற்றுவர். இறைவனை ஸகுணமாக - குணம், குறி உள்ள பரம்பொருளாகவோ வழிபடலாம். அல்லது நிர்க்குணமாக - குணம், குறி அற்ற பரம்பொருளாகவோ வழிபடலாம். மிகவுயர்ந்த ஞானநிலையில் இறைவன் பரஞ்சோதியாக நாமரூபமற்றவனாக விளங்கினாலும் ஸகுணநிலையில் பிள்ளையார், முருகன், சிவன், சக்தி, விஷ்ணு முதலிய பெயர்களையும் அவற்றோடு தொடர்புள்ள குணாதிசயங்களையும் பெறுவான். இங்கு பரம்பொருள் ஒன்றேயாயினும் பல பெயர்களால் அப்பொருள் அழைக்கப்படுவது கண்கூடு. அடிப்படையில் இந்துமதத் தெய்வங்கள் ஒரே குடும்பத்தை - சிவகுடும்பத்தைச் சேர்ந்தோராகவே கூறப்படுகின்றனர். பிள்ளையார், சிவன் - சக்தியாகியோரின் மூத்த திருக்குமாரனாகவும், முருகன் இளைய திருக்குமாரனாக விஷ்ணு சக்தியின் மூத்த சகோதரனாகவும் விளங்குகின்றனர். வைரவர், வீரபத்திரர், ஐயனார் ஆகியோரும் சிவனின் திருக்குமாரர்களாகவே வருணிக்கப்படுகின்றனர். ஒரே பரம்பொருளாகிய சிவனே பல்வேறு நோக்கங்களுக்காகப் பல்வேறு வடிவங்களை வெவ்வேறு காலகட்டங்களில் தாங்கி உலகிலே நிலவிய மறத்தையும், தீமைகளையும் களைந்து அறத்தையும் நன்மையையும் நிலைநாட்டினார் எனக் கூறப்படுகின்றது. எனினும், ஒவ்வொரு திருவுருவத்திற்குமான தத்துவார்த்த விளக்கங்களும், குறியீடான கருத்துக்களும் உண்டு. விநாயகன் எனில், தனக்கு மேலான தலைவன் இல்லாதவன் (விநாயகன்) எனப்பொருள்படும். இவன் இறைவனின் எல்லா வடிவங்களுக்கும் முதன்மையானவன். அநாதியான பரம்பொருளாக ஆதி, அந்தம் அற்றவன். எவருக்கும் ஏற்படக்கூடிய இடையூறுகளின் தலைவனாகவும் (விக்னராஜ) அவற்றை நீக்குபவனாகவும் விளங்குகிறான். இவ்வகையில், எக்காரியத்தை எவர் செய்யினும் அதற்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை நீக்கும்வண்ணம் முதலில் விநாயகனையே வணங்குவர். மேலும் யாவற்றுக்கும் மேலாக உள்ள மூலகாரண மூர்த்தியாக மிளிரும் விநாயகப் பெருமானுக்கு முதலிலே வணக்கம் செய்யப்படுகின்றது எனலாம். விநாயகனின் பெருமைகளையும் அன்பரிடத்தும், பிறர் இடத்தும் அவர் கொண்டிருக்கும் இயல்பான அன்பு பற்றியும் வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள், பிற்கால நூல்கள் முதலியன விவரிப்பன. - விநாயகர் அடியான்.

## ஆலயத்தின் நித்திய குருவின் ஆசியுரை

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலராய் நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

மேன்மைகொள் சைவநீதி உலகெலாம் விளங்கும் சைவமும் தமிழும் ஒருங்கே அமைந்த ஈழவள நாட்டின் வடபால் யாழ்ப்பாணம் வேலணையில் தன்னைத் துதித்தார்க்கும் துதியாதார்க்கும் ஒருங்கே அருள் பாலிக்கும் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையாருக்கும் பரிவார மூர்த்திகளுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்சதள இராஜகோபுர நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் செய்வதற்கு அவன் அருள்பாலித்திருப்பது நாம்செய்த பூர்வபுண்ணியத்தினால் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. வானுலகும் மண்ணுலகும் வாழ்வாங்கு வாழ ஓம்காரரூபன் துணை நிற்பார் என்பது திண்ணம். உலக மக்களும், தம் ஊர்மக்களும் அனைவரும் அவன் அருளால் ஆசிவழங்கும பாக்கியம் பெற்ற யானும் ஆசி கூறி அமைகின்றேன். வாழ்க வளத்துடன்.

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்.

பிரம்மஸ்ரீ இ.சோமசுந்தரக்குருக்கள், ஆலய நித்திய குரு.

## பெரியபுலத்தமர்ந்த மகா கணபதிப்பிள்ளையாரே போற்றி

அவைதிக பிரணவத்தின் வடிவே, வேதம்
அசலத்தில் வரைத்தவனே தாரணத்தின்
மீனிர் மாதம் பங்குனி பத்தேழு புந்தி
மேவு மனுஷம் பொருந்தும் இடபத்தானம்
குளிர் கும்பாபிஷேக மேற்று வந்த செல்வா
கோபுரத் தோடலங்காரக் கோயில் கொண்டு
வளரும் வேலணைப் பெரிய புலத்தமர்ந்த
மகா கணபதிப் பிள்ளையாரே போற்றி
முடிப்பிள்ளையாரென்று பேர் படைத்து
முந்தி வந்து தொழுமடியார் கவலை தீர்த்தாய்
படிப்படியாயலங்கார மாயமைந்த
பாங்கான கோபுரத்தில் தேவர் சூழ்ந்து
கடிக்கமல மலர்பணிய வீற்றிருக்கும்
கணபதியே நின்கருணை விழியினாலே
அடித்தொண்டர் அகம்குளிர வளம் செழிக்க
அருந்தமிழின் நலம் செழிக்க அருள்வாய் போற்றி

அருட்கவி சீ.விநாசித்தம்பி M.A.

## வாழ்த்துரை

"கணபதி பூசை கைமேற்பலன்"என்று சொல்லுவார்கள். அது முற்றிலும் உண்மை. அவரை நினைத்து எந்தக் கருமத்தைத் தொடங்கினாலும் அதிலே வெற்றி நிச்சயமாக உண்டு. எமது சைவசமய வழிபாட்டில் ஓர் ஒழுங்கு பேணப்படுகின்றது. அதற்கேற்ப முதல்வணக்கம் விநாயகருக்குச் செலுத்தப்படுகின்றது. உள்ளத்தை ஒருமுகப்படுத்தி கும்பிடுவதற்கு எம்மை ஆயத்தப்படுத்திவிடுவது குட்டிக் கும்பிடுவதாலும் தோப்புக் கரணம் போடுவதாலும் நிறைவேறுகின்றது. மேலும் இவை தேகத்துக்குச் சிறந்த பயிற்சியுமாகின்றது. பிள்ளையாருக்குத் தோப்புக் கரணம் போட்டால் இந்த உலகத்தில் வேறு எவருக்கும் பணிய வேண்டிய நிலைமை ஏற்படாது. இவ்வாறு சமய ஒழுக்கம் வாழ்க்கை முழுவதிலும் கலந்துவிடுவதால் எமது சொல்லும்செயலும் தூய்மையடைகின்றன. குடமுழுக்குப் போன்ற பெருவிழாக்களால் தேவர்கள் பிரீதியடைந்து மானிடரைவாழ்த்தி ஆசி கூறுகின்றார்கள். இவற்றிலமைந்த ஒவ்வொரு கிரியைகளும் தேவர்களை மகிழ்விப்பனவாகும். இதனால், இறைவனுடைய திருவருட் பிரவாகம் ஆலயங்களிலும் விக்கிரகங்களிலும் பெருகுகின்றது. இதனால், மக்கள் நலமடைவதோடு, ஊரும் உயர்வடைகின்றது. இதனாலேயே இவ்விழாவுக்குப் "பெருஞ்சாந்தி விழா" என்று குறிப்பிடப்படுகின்றது. மனிதன் மனத்தையுடையவனாக மாத்திரமிருக்காது மனத்தை ஆள்பவனாக விளங்கவேண்டும்.

சென்ற விடத்துச் செலவிடாது தீதொரீஇ
நன்றின் பாலுய்ப்பது அறிவு

என்பதை உற்று உணரும்போது அதற்கு வழிகாட்டுவது தெய்வ நம்பிக்கையும் வழிபாடுமேயாகும்.

வேலணை வாழ் சைவ மக்கள் திருப்பணிகளில் முன்னின்று உழைப்பவர்கள். கோயில் கட்டி கோபுரம் அமைத்துத்திருத்தொண்டுசெய்பவர்கள். இதனாலேயே மகா கணபதிப் பிள்ளையார் திருக்கோயில் இன்று குடமுழுக்குக் காணும் சிறப்புக்குரியதாக விளங்குகின்றது. பிள்ளையார் தனது அடியார்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பவர். அன்பர்களை அரவணைத்து அருள்பொழிபவர். இவ்வனுபவத்தை ஆலய அந்தணப் பெருமகனார் தொடக்கம் அனைவரும் அறிவர். ஆகவே, நாமனைவரும் எல்லாம்வல்ல விநாயகப்பெருமானை வணங்கிக் குடமுழுக்குத் தரிசனத்தாலான பயனையும் பெற்று உய்தியடைவோமாக.

*பண்டிதை. துர்க்கா துரந்தரி. சிவத்தமிழ்ச் செல்வி.*
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
*தலைவர். அருள்மிகு துர்க்காதேவி தேவஸ்தானம்*

## பெரியபுலத்தாரின் பேரருள் அனைவருக்கும் கிடைப்பதாக.

வேலணை மேற்கு பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலயத்தில் இன்று நடைபெறும் புனராவர்த்தன பிரதிஷ்டா நூதன இராஜகோபுர நவகுண்ட மகா யாக மகாகும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி விழாவைக் காண்பதற்கு அருள்கிடைத்த அனைவரும் பாக்கியசாலிகள். எம்பெருமானின் ஆலயத்தில் பல்வேறு திருப்பணிகள் நிறைவேறிய நிலையில் கும்பாபிஷேகம் நடைபெறுவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது.

1991 புலப்பெயர்வுக்குப் பின்னர் எமது ஊரவர்கள் உலகின் பல பாகங்களுக்கும் சென்றாலும் அனைவரையும் எம்பெருமான் ஒன்றிணைத்து இப்புனித கைங்கரியத்தைச் செய்வதற்கு அருள்பாலித்துள்ளார். பிள்ளையாரின் திருப்பணிகளிலும், கும்பாபிஷேகப்பணிகளிலும் எல்லோரும் சேர்ந்து நின்று ஒன்றாக அவன் அருள்வேண்டிப் பணிகின்ற பாக்கியம் எமக்குக் கிடைத்துள்ளது. ஐங்கரன் அடியார்களின் அளப்பரிய உதவிகள் கணடு பரிபாலன சபையினர் பிரமித்து நிற்கிறார்கள். பிள்ளையார்மீது வைத்துள்ள பக்திவிசுவாசத்தைச் சொல்வதற்கு எனக்கு வார்த்தைகள் வரவில்லை. பெருமிதத்தால் பூரித்து நிற்கின்றோம்.

கடல்கடந்து, எல்லைகள் கடந்து எங்கு வாழ்ந்திடினும் நாம் உணர்வால், உறவால் ஒன்றாக நின்று எம்பெருமானின் கும்பாபி ஷேகத்தை மிக உன்னதமாக நடத்துவதையிட்டு எல்லையில்லா ஆனந்தத்தில் நாம் மிதக்கின்றோம்.

பெரியபுலத்தானின் பேரருள் எங்கள் எல்லோருக்கும் கிடைக்க அவனது பாதாரவிந்தங்களைப் பணிகின்றேன். அவன் திருவருளால் எம்மவர்கள் எல்லோரும் பேரானந்தப் பெருவாழ்வுவாழ இந்த நன்னாளில் அனைவரையும் வணங்கிப் பணிகின்றேன்.

"விநாயகர் பாதம் தொழ மாண்பு மிகுந்து வரும்"

பொன்னம்பலம் அருணகிரிநாதன்
*தலைவர். ஆலய பரிபாலனசபை. பெரியபுலம்*
*மஹா கணபதிப்பிள்ளையார் கோயில். வேலணை மேற்கு.*

விளம்பர அனுசரணை:-

விக்னேஸ்வரா நகைப் பூங்கா

205/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P:. 021 4590022

10B,34D, கந்தசுவாமி கோயில் வீதி, வவுனியா T.P: 024 222 1857, 024 222 1910

157, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06 T.P:. 0112 559535,

முடிப்பிள்ளையார் நகைப்பூங்கா, 167, யாழ்சாலை, கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் தம் இடங்களுக்குத் திரும்பினர் எனினும் இயல்பு நிலைமை பாதிப்பு

கொழும்பு.மார்ச்30

சுமத்திராத் தீவின் அருகே கடலில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை அடுத்து இலங்கையின் கரையோரத்தை ஆழிப் பேரலைகள் தாக்கலாம் என்று அரசு விடுத்திருந்த எச்சரிக்கை நேற்று அதிகாலையில் நீக்கப்பட்டது. இதனை அடுத்து காலையில் மக்கள் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர். எனினும், பீதி காரணமாகக் கரையோரப் பகுதிகளில் நேற்று முழுமையான இயல்பு நிலை திரும்பவில்லை.

கரையோரப் பிரதேசங்களில் அலுவலகங்களும் பாடசாலைகளும் செயலிழந்து காணப்பட்டன. ஊழியர்களதும் மாணவர்களதும் வருகை வெகு குறைவாகவே காணப்பட்டது. போக்குவரத்துகளும் பெரியளவில் பாதிக்கப்பட்டிருந்தன. வங்கிகள் தமது சேவை நேரத்தை மட்டுப்படுத்திக் கொண்டன.

ஆழிப்பேரலை குறித்து நேற்றுமுன்தினம் இரவு அரசால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை நேற்று அதிகாலை 3 மணியளவில் விலக்கிக் கொள்ளப்பட்டது. நிலநடுக்கம் ஏற்பட்டு பல மணி நேரங்கள் ஆனதன் பின்னரும் இலங்கை, இந்திய கடற்பகுதிகளில் எந்தவித மாறுதல்களும் அவதானிக்கப்படாததை அடுத்து அபாய எச்சரிக்கை நீக்கப்பட்டது. இரவோடிரவாகப் பாதுகாப்புக் கருதி தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியிருந்த மக்கள் காலையில் தமது இடங்களுக்குத் திரும்பினர். (க-3)

## சாவகச்சேரி நகரத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நகரைப் பார்வையிட்டனர். அதன்பின்பு புதிய நகர அமைப்புத் திட்டத்தை வகுப்பது என்று கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ், பிரதேச செயலர் எஸ்.சிறினிவாசன் ஆகியோர் சாவகச்சேரி நகரை நவீன மயமான நகராக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

கடந்தகால யுத்தத்தால் சாவகச்சேரி நகர் பெரிதும் அழிவுக்குள்ளாகியுள்ளது. ஆகவே, அந்தப் பிரதேசம் புதிய நகராகப் புனரமைக்கப்படவேண்டும் என்று அவர்கள் எடுத்துக் கூறினர்.

இக்கோரிக்கையை எற்றுக் கொண்ட புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளரும் நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவரும், புதிய திட்டம் ஒன்றை வகுப்பதற்குக் கொள்கையளவில் இணக்கம் தெரிவித்தனர்.

சுனாமி பாதித்த பகுதிகளில் திட்டமிடல் வேலைகள் தற்சமயம் நடைபெறுகின்றன என்றும் -

அது பூர்த்தியானதும் சாவகச்சேரி நகரத் திட்டம் தயாரிக்கும் பணி ஆரம்பமாகும் என்றும் -

நகர அபிவிருத்தி அதிகார சபைத் தலைவர் தெரிவித்தார். (ஐ-3-117)

## பொதுக்கட்டமைப்புக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடயங்களைக் கவனத்தில் கொண்டு திருந்திய - புதிய - யோசனைத்திட்டம் ஒன்றைக் கடந்தவாரம் - 22ஆம் திகதி - அரசுத்தரப்பிடமும், புலிகள் தரப்பிடமும் ஒரே சமயத்தில் நோர்வே சமர்ப்பித்திருந்தது.

அந்தத் திருத்த யோசனைத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த புலிகள், இந்த விடயம் தொடர்பாகத் தமது புதிய ஆலோசனைகள் அடங்கிய ஒரு திட்டத்தை நேற்றுமுன்தினம் வியன்னாவில் வைத்து எரிக் சொல்ஹெய்மிடம் கையளித்தனர்.

அந்தத் திட்டங்களில் உள்ள அம்சங்களை நேற்று இலங்கை அரசுத் தரப்புக்கு சொல்ஹெய்ம் தெரியப்படுத்த இருந்தார் என அறியவந்தது.

ஆனால், அந்த யோசனைத் திட்டத்தை இலங்கை அரசுத் தரப்பு ஏற்பதற்குப் பெரும்பாலும் வாய்புக்களே இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

வியன்னாவில் நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பின்போது, இலங்கை அரசின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் பணியாற்றி வரும் புலிகளின் உறுப்பினர்களுக்கு எதிராக - புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு முரணான வகையில் - தாக்குதல்கள் நடத்தப்படுவது குறித்துத் தமிழ்ச்செல்வன் சொல்ஹெய்மிடம் கவலை தெரிவித்தார்.

களத்தில் மோசமடைந்துவரும் சூழ்நிலையால் யுத்தநிறுத்த உடன்படிக்கை, சமாதான முயற்சி, முக்கியமாக ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னான பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு ஆகியனவற்றில் மோசமான பாதிப்பு ஏற்படுவது பற்றி அனுசரணையாளர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும் என தமிழ்ச்செல்வன் வலியுறுத்தினார்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது தொடர்பாக நோர்வேத் தரப்பு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கைகளை விளக்கிய எரிக்சொல்ஹெய்ம், இது விடயத்தில் நல்லெண்ணத்தையும், பற்றுறுதியையும் வெளிப்படுத்தி அதிக விட்டுக் கொடுப்போடும், சாதகமாகவும் நடந்து கொள்ளுமாறு புலிகள் தரப்பிடம் வேண்டுகோள் விடுத்தார். (க-3)

## போராளிகள், பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போருக்கு ஓய்வுகொடுத்து, அமைதிவழியில் அரசியல் தீர்வுகாணும் நெஞ்சுறுதியுடனும் புலிகள் இயக்கம் அரசியல் என்னும் மக்கள் பணியாற்றிவருவதைச் சர்வதேசமும் நன்கு புரிந்துகொண்டு தனது ஆதரவை வழங்கிவருகின்ற இவ்வேளையில், ஸ்ரீலங்கா அரசின் அதிகட்டுப்பாட்டுப் பகுதியில், அதுவும், படையினரின் முகாம்களுக்கு அருகில் அவர்களின் முழுமையான ஆதரவுடன் படுகொலைகள் அரங்கேறிவருவது மக்கள் மத்தியில் பலத்த சந்தேகத்தையும், கட்டுமீறிய கோபாவேஷத்தையும் தூண்டிநிற்கின்றது.

கிழக்கில் புலிபாய்ந்தகல் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகள் முகாமுக்கு உணவு கொடுத்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போராளிகள் இருவர் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கின்றனர். விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், உறுப்பினர் ரதனும் விசேட அதிரடிப் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிக் காயமடைந்துள்ளார்கள். இதுஒரு சாதாரண விடயமாக சர்வதேசமும் ஸ்ரீலங்கா அரசும் நியாயப்படுத்திவிட முடியாது. இதனால், ஏற்படப்போகின்ற பாரதூரமான ஆபத்தான நிலைமையை ஸ்ரீலங்கா அரசு புரிந்துகொள்ளுகின்ற நிலையில்லை. இதற்கான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டியது சர்வதேச சமூகத்தினதும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினதும் பாரிய பொறுப்பு. இந்த அநீதிகளை, அட்டூழியங்களை, படுகொலைகளைக் கண்டிக்கவும் மக்கள் தமது துறைசார்ந்த தீவிர எதிர்ப்பையும், கண்டனத்தையும் பேரணியூடாகப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும், சர்வதேச சமூகத்திற்கும் வெளிக்காட்டத் தம்மைத் தயார்ப்படுத்திவரு கிறார்கள் என்பதையும் மாவட்ட பொது அமைப் புகளின் ஒன்றியம் இந்தக் கண்டன அறிக்கை மூலம் சுட்டிக்காட்டியிருக்கின்றது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## ரஷ்யாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன்பின், யாழ்ப்பாணம், அரியாலை, சாவகச்சேரி, உசன் ஆகிய முகாம்களுக்கு விஜயம் செய்த அவர், அங்குள்ள பாதுகாப்பு நிலைவரம் குறித்து ஆராய்ந்தார்.

அதன்பின் அவர் முகமாலை சோதனை நிலையத்துக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்டார்.

இன்று காலை காங்கேசன்துறை கடற் படை முகாமுக்குச் செல்லும் அவர், கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதுடன், கீரிமலை உட்பட பல பகுதிகளுக்குச் செல்வார். (3)

## போராளிகள் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் வீதியோரங்களில் ஒட்டப்பட்டிருந்தன. வீதிகளில் டயர்கள் போட்டு எரிக்கப்பட்டன. ஆங்காங்கே வன்முறைகளும் இடம்பெற்றன.

"சந்திரிகாவே நலன்புரி நிலையங்களில் இருந்து ஆயுதப்படையை வெளியேற்று!", "அஹிம்சையை முறியடிக்க நினைக்காதே, அதை சகிக்கும் தன்மை உனக்கில்லை", "கூலிப் படையின் கேலிக் கூத்தும் ஆயுதப்படைகளின் அடாவடித் தனமும் அகதிவாழ்வில் வேண்டாம்", "அரசபடையே ஈழத்தை விட்டு வெளியேறு!" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

வீதிகளில் டயர்களைப் போட்டு எரித்த இளைஞர்களுக்கும் படையினருக்கும் இடையே சிறிதுநேரம் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனை அடுத்து விசேட அதிரடிப் படையினர் இரு பொதுமக்களைத் தாக்கியும் மோட்டார் சைக்கிள் ஒன்றை உடைத்தும் அடாவடித்தனம் புரிந்தனர். எனினும், மக்கள் அங்கிருந்து செல்லாததையடுத்து விசேட அதிரடிப் படையினர் அந்த இடத்தைவிட்டு வெளியேறினர். இன்றும் ஹர்த் தால் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருளானந்தம் திரேசம்மா



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளானந்தம் திரேசம்மா 25-03-2005 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் வஸ்தியாம்பிள்ளை அருளானந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற அருளப்பு சலமை ஆகியோரின் அன்பு மகளும் காலஞ்சென்ற வஸ்தியாம்பிள்ளை றபேக்கம் ஆகியோரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான றேசம்மா, சின்ராசா, தங்கரத்தினம், குணசிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அந்தோனியம்மா, காலஞ்சென்ற இராசாத்தியம்மா ஆகியோரின் அருமை மைத்துனியும் இராசமலர், பத்மாவதி, இதயராணி (ஜேர்மனி), சிறிஸ்கந்தராசா (பிரான்ஸ்), சந்திரராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நீக்கிலாப்பிள்ளை, இராசா, ரஞ்சன் (ஜேர்மனி), சந்திரகுமாரி (பிரான்ஸ்), அனுசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ராஜு (பிரான்ஸ்), ரஜனி + பிறேமதாஸ், டெனிற்றா (யாழ்.பல்கலைக்கழகம்), கலிஸ்ரா, கஜேந்தினி, நிஷாந்தன், நிரோஷன், நிரஞ்சனா, ஜிவிந், சியந், தர்ஷி (ஜேர்மனி) ஷறினோ ஏஞ்சல், ஜொனி (பிரான்ஸ்), ஷனூஜன், ஷமிரா, பிரவின் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் சானுஷாவின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-03-2005) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, ஆனைக்கோட்டை புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கணவர்: வ.அருளானந்தம்
பிள்ளைகள்: இராசமலர், பத்மாவதி, ராணி, சிறி, சந்திரா.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.*
(43658) (24-38-14-15)

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (அரசு)

(சிறப்ப மேதையும் இளைப்பாறிய ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி)



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் அரசடி லேன், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது இந்தியாவில் வசித்தவருமாகிய சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை அவர்கள் 24.03.2005 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2005) புதன்கிழமை இந்தியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (அராலி தெற்கில் அன்னாரது துக்கம் அனுஷ்டிக்கப்படும்).

தகவல்:
இ.பிரபாகரன் (பிரான்)
(மருமகன்).

*அராலி தெற்கு,*
*அராலி.*
(43669) (38-14-15)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

(ஓய்வுபெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்)



இல.45, புவனேஸ்வரி அம்பாள் வீதி, அரியாலை மேற்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை அவர்கள் நேற்று (2005.03.29) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கனகம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகமுத்து - நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புனிதவதி மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரரும் தம்பு, காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் மைத்துனரும் சிவகுமாரன் (எழுதுவினைஞர், யாழ்.பல்கலைக்கழகம்), தூயகுமாரன் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), யோகமலர், மல்லிகாமலர் (லண்டன்), புனிதமலர் (லண்டன்), குசலகுமாரன் (ஹொலண்ட்), சந்திரமலர் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவரத்தினம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.மாநகரசபை), புவனேஸ்வரன் (லண்டன்), கெங்காதரன் (லண்டன்), ஞானசீலன் (லண்டன்), தியாகவதி (ஆசிரியர், கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம்), ஹேமநந்தினி (சங்கீத ஆசிரியர், கொழும்புத்துறை சென்.யோசப் வித்தியாலயம்), விமலினி (ஹெலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.03.2005) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்:
வே. சிவகுமாரன்
(மகன் - எழுதுவினைஞர், யாழ். பல்கலைக்கழகம்).

*இல.45,*
*புவனேஸ்வரி அம்பாள் வீதி,*
*அரியாலை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.*
(43668) (38-14-15)


தயா அசசகம
கனனி பதிப்பகம்
பாடசாலை
அதிபர்களுக்கு!
★ தரம் 01 முதல் 10 வரையான மாணவர் கணிப்பீட்டு அறிக்கை, மாணவர் தேர்ச்சி அறிக்கைகள் வெளிவந்துவிட்டன.
138, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
T.P: 222 2881

SKY COMPUTER S YSTEM
No,109,Kandy Road, Chundikuli, Jaffna.
விற்பனைக்குண்டு
Pentium III 500 MHZ IBM Computer, With Multimedia
10 GB Hard Disk
128 MB RAM
25,500/=
ஒருவருட உத்தரவாதத்துடன்
Unlimited soft ware & free dust cover
15" Monitor - 6,500/=
(ச-41699) (30-11-45) கச்சேரிக்கு அருகில்.

தபால் மூலம்
Cellphone Electronics
Marconi
தபால் மூலம் குறைந்த கட்டணத்தில் இலத்திரனியல் மற்றும் செலுலர் தொழிற் பயிற்சிகளைக் கற்க விரும்புபவர்கள் கற்கை நெறி பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள மேலதிக ரூ 5 முத்திரை ஒட்டிய நீள கடித உறையை வைத்து அனுப்பவும். கற்கை முடிவில் பயிற்சி, பரீட்சை மூலம் சான்றிதழைப் பெறலாம். இந்தத் திட்டத்தில் வயது வேறுபாடின்றி ஆண், பெண் அனைவரும் இணைந்து கொள்ளலாம். கொழும்பு மற்றும் இலங்கையின் சுற்றுப்புறத்தில் இருக்கும் அனைவரையும் இதில் இணைந்து பயன் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.
MARCONI TECHNICAL INSTITUTE
410, 2nd floor, Galle Road,Wellawatta. TP: 2 361362

EXPOAIR
your friend in the skies...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.